876

தொகுதி 10.] 1931ஞு அக்டோபர்மீ 1உ [பகுதி 9.

11 NOV 1931

மனமோகினி.

ஆக்கியோன்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

2086

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 5-பாகம் விலை ரூபா 10-0-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களையும் டிபப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

11 NOV 19

கோமளம்:—ஓ, இதென்ன ஆச்சர்யமாயிருக்கிறது. அவர்கள் உனக்குத் தெரியும்போலும்! சுகானந்தனுடைய பெயரும் உனக்குத் தெரியுமென்று சொன்னாய். அந்த மரகதவல்லியின் கடைசி குமாரியாகிய மீனாம்பாள் என்பவள் மட்டும் அச்சூழ்ச்சியில் கலந்துகொள்ளாமல் எங்கேயோ வழிதவறி வந்து இங்கு நமது வீட்டில் சில காலம் இருந்தாள் என்னும் விஷயத்தை அறிந்தால் நீ இன்னும் ஆச்சர்யப்படுவாய் போலும்!

சுந்தரம்:—அப்படியானால் அவள் யார் என்னும் விஷயத்தை நீ தெரிந்துகொண்டாயா?

கோம:—ஆம்; தெரிந்து கொண்டேன். இரத்தினபுரிக்குச் சிறிது தூரத்திலுள்ள இராமாபுரியில் வசித்துவரும் மரகதவல்லியின் குமாரியே அவள். அவர்கள் இருவரும் இப்போது நமது கந்தபுரி ஓட்டலில் தங்கியிருக்கிறார்கள். அந்த அம்மாளும் இன்று காலை இங்கு வந்திருந்து நெடுநேரம் வரை இங்கேயே இருந்தாள்.

சுந்தரம்:—கோமளம்! நீ என்னை ஆச்சர்யக் கடலிலேயே ஆழ்த்துகின்றாயே! அவள் இங்கு வந்தபோது ஏதேனும் விசேஷத்தைக் கூறினாளா?

கோம:—இல்லை! அப்படி ஒன்றும் விசேஷம் கூறவில்லையே! அம்மாது மிக்க துக்கத்தில் மூழ்கியிருக்கிறாள். அவள் மீனாம்பாளையும் தன்னுடன் அழைத்துச் சென்றிருக்கிறாள். அவளுடைய குமாரிகளில் அம்புஜம் என்பவள் பரிதிபுரத்தில் கொல்லப்பட்டாள். இராங்கம்மாளும் ஜானகியும் பைத்தியம் பிடித்தவர்களாய் அங்கேயே ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்.

சுந்தரம்:—ஓ! இதெல்லாம் கேட்பதற்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. மரகதவல்லி கந்தபுரியைவிட்டுப் போய்

18656l.

விட்டாளா? அல்லது மீண்டும் உன்னைக்காண இங்கு வருவாளா?

கோம:—ஆம்; வருவாள். அவள் இன்னும் இரு தினங்களேனும் இங்கும் இரத்தினபுரியிலுமாக இருந்துவிட்டுப் பிறகுதான் பரிதிபுரம் செல்வாள். இரு! யாரோ மாடிமீது ஏறிவரும் சத்தம் கேட்கிறது. அந்தப் பாவி சுகானந்தான் வருகிறானோ என்னமோ! இல்லை, இல்லை. நமது வேலைக்காரி வருகிறாள். அவள் மாகதவல்லியையும் மீனம்பாளையும் கந்தபுரி ஓட்டல்வரை கொண்டுபோய் விடப்போனாள். அவள்தான் வருகிறாள்.

அங்கு வந்துசேர்ந்த வேலைக்காரி, தன் எஜமானி பேசவும், மற்ற வேலைகளைச் செய்யவும் முடிகிறதென்பதையும், நோயினின்றும் நிவர்த்தியானாள் என்பதையும் அறிந்ததும் மிகவும் சந்தோஷமடைந்தாள். ஆனால் சுந்தரம்மாள் திடீரென எழுந்து வந்ததற்குக் காரணமாயிருந்த சம்பவத்தைப் பற்றி அறிந்தபோது சுகானந்தனிடம் அதிக கோபம்கொண்டாள். ஆயினும் அவனால்தான் சுந்தரம்மாளுக்கு நோய் நிவர்த்தியானதால் சிறிது கோபம் அடங்கியது. வேலைக்காரியும் எஜமானிக்கு வணக்கம் செலுத்தி அவள் எதிரில் நின்றாள்.

பிறகு சுந்தரம்மாள் கோமளவல்லியைப் பார்த்து, 'என தன்புள்ள கோமளம்! இனி நீ போய்ப் படுத்துக்கொண்டு தூங்கு. எனக்குக் காவலாக நமது வேலைக்காரி இருப்பாள். நாளை அதிகாலையில் எழுந்ததும் நீ என்னை வந்துபார், நான் உன்னிடம் பல விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டியதாய் இருக்கிறது. பல சிறுசிறு விஷயங்களையெல்லாம் உன்னிடமிருந்து நான் தெரிந்துகொள்ளவேண்டும். நான் பேசமுடியாமலும், உலகமே தெரியாமலும் மயக்கத்தில் இருந்தகாலத்தில்

நடந்த பல விஷயங்களின் விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். எனக்கு இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இவ்வளவு ஆவலிருந்தாலும் நாளை காலை வரை பொறுத்தே யாகவேண்டும். எனக்கு இப்போதே களைப்பாக இருக்கிறது. ஆகவே நான் தூங்கப்போகிறேன்' என்று கூறினாள்.

உடனே கோமளவல்லி சுந்தராம்மாளைக் கட்டி யணைத்துக்கொண்டு விட்டுப் பிறகு வேறொரு அறைக்குப் படுக்கச் சென்றாள்.

163 - வது அத்தியாயம்

மறுநாள் காலை ஆறுமணிக்குள் கோமளவல்லி எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு முகத்தைக் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டு நேராக சுந்தராம்மாள் படுத்திருந்த அறைக்குச்சென்றாள். அதே சமயத்தில் அந்த அறையிலிருந்து வெளிவந்த வேலைக்காரியின் முகத்தைப் பார்த்துத் தன் அத்தைக்கு அசௌகரிய மொன்றுமில்லை என்று தெரிந்துகொண்டாள். சுந்தராம்மாளும் இரவெல்லாம் நன்றாகத் தூங்கிவிட்டு அப்போது தான் விழித்துக்கொண்டிருந்தாள். சுந்தராம்மாளும் கோமளவல்லியைக் கண்டதும் அன்புடன் வரவேற்றுத் தன் படுக்கையில் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, "எனதன்புள்ள கோமளமே! இப்போது நாம் மீண்டும் பழைய சமாசாரத்தைப்பற்றிப் பேசத் தொடங்குவோம். நேற்று இரவு மரகதவல்லியைப்பற்றியும் அவளுடைய குமாரிகளைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். இப்போது மேது கற்பகவல்லியைப்பற்றிக் கவனிப்போம்," என்று கூறினாள். அதற்குக் கோமளவல்லி தன்னிட

மிருந்த காகிதங்களையெல்லாம் தன் அத்தையிடம் கொடுத்து, "இதோ எனது சகோதரியிடமிருந்தும், ஜகதீசனிட மிருந்தும் அப்போதைக் கப்போது கிடைத்த கடிதங்கள் இருக்கின்றன. இதனால் நீ எல்லா விவரங்களையும் அறிந்துகொள்ளலாம்," என்றாள்.

சுந்தரம்:—கோமளம்! நீ நல்லபெண். நீ உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவளாயும், கபடமற்றவளாயும் இருப்பதைக்காண எனக்கு மிக சந்தோஷமாக இருக்கிறது.

கோமளம்:—அத்தையே! நான் சிறிதும் கர்வமின்றி நிச்சயமாகச் சொல்கிறேன். நீ கேள்விப்பட்டால் நான் வெட்கப்படும்படியான எந்த ஒரு காரியத்தையும் மனம் வாக்கு காயத்தாலும் நான் இழைத்ததில்லை. ஆனால் ஒரே ஒருமுறைதான் நான் உன்னைவிட்டுச் சொற்ப காலம் பிரிந்தேன். அப்போதும் என்னைப்போலவே இனிய குணமுள்ளவளாயும், உன்னிடமும் அன்புடையவளாயுமுள்ள நமது மீனும்பாளை எனக்குப் பதிலாக உனக்குச் சிஷ்ருஷைசெய்ய விட்டுவிட்டே சென்றேன்.

சுந்:—ஆ! அப்படியா? என்னை விட்டுவிட்டு நீ எங்கே, ஏன் போனாய்? விவரத்தைக் கூறு பார்ப்போம்.

கோம:—நான் அப்போது பரிதிபுரம் சென்றிருந்தேன். நான் அச்சமயத்தில் மிக சங்கடமான நிலைமையில் சுக சிங்கம்பிரபு என்பவரால் அழைத்துச் செல்லப்பட்டேன். எனது காதலனை ஜகதீசன் வேறொரு பெண்ணினிடம் காதல்கொண் டிருக்கிறானென்றும், அவன் மிக அயோக்கியனென்றும் எனக்குக் காட்டவே அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டது. அன்புள்ள அத்தையே! அப்போது நான் மிக்க துக்கமுள்ளவளாக இருந்தேன்.

அப்பிறபு எனக்கு அதையெல்லாம் பற்பலவிதமான சந்தர்ப்பங்களாகக் கற்பித்து விட்டு இரத்தினபுரிக்கு அழைத்துவந்தார். வந்தவிடத்தில் அவர் என் நிலைமையைக் கண்டு மெதுவாக என்னைக் கெடுத்துவிட முயன்றார். அதுமட்டுமா? அவருடைய சகோதரனுடைய மகள் ஒருத்தி, ஆ, மிக அழகுள்ளவளாய் இருந்தும் அவருடன் சேர்ந்துகொண்டு என்னைப் பாழ்படுத்த முயன்றதுதான் ஆச்சர்யமாக இருந்தது. ஆனால் இறைவன் அருளால் எனக்கு ஒரு நல்ல துணை கிடைத்தது. அத்துணை நமது கற்பகவல்லியினால்தான் அனுப்பப்பட்டது. பிறகு நான் கற்பகவல்லியைப் பார்த்துவிட்டு நேராக நமது இந்த வீட்டுக்கு வந்துவிட்டேன். அப்போது ஜகதீசனிடம் நான் எப்படிப்பட்ட சந்தேகமும் கொள்ளவேண்டிய தில்லையென்றும், எனக்குப் பரிதிபுரத்தில் காண்பிக்கப்பட்டதெல்லாம் வெறும் மோசடி என்றும் கற்பகவல்லி விவரமாகத் தெரிவித்தாள். பிறகு சிறிது தினங்களுக்குள் ஜகதீசனே கடவுள் கிருபையால் சுகமாகத் திரும்பிவந்து எனக்கு விஷயத்தை விளக்கிச் சந்தேகத்தை நிவர்த்தி செய்தான். உடனே அவனுக்கு இளவரசருடைய சகோதரியாகிய சுந்தராங்கியிடமிருந்து உடனே ரத்தினபுரிக்கு வரும்படி ஒரு கடிதம் கிடைத்தது. அவனும் அப்படியே சென்றான். அதனால் அவன் மீண்டும் பரிதிபுரத்துக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது நடந்தது ஆறு அல்லது ஏழு மாதங்களுக்குமுன். அதுமுதல் அவன் அங்கேயே இருக்கிறான். ஆனால் நான் நேற்றிரவு உன்னிடம் தெரிவித்தபடி அவன் இரண்டொரு தினங்களில், நமது இளவரசிக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளையெல்லாம் சின்னபின்னப்படுத்தி அவ்விளவரசியைக்

காப்பாற்றினுனென்னும் கீர்த்தியுடன் திரும்பிவரப்போகிறுன். அத்தையே! சுருக்கமாக எதையும் ஒளியாமல் என்னைப்பற்றிய விஷயத்தை உனக்கு அறிவித்துவிட்டேன்.

சுந்:—ஆ! எனதன்புள்ள பெண்ணே! உண்மையிலேயே நீ பல கஷ்டமான நிலைமைகளையெல்லாம் சமாளித்திருக்கிறுய். நீ இப்போது சௌக்கியமாக எல்லாவகை ஆபத்தினின்றும் விடுபட்டிருப்பதால் நடந்துபோன காரியங்களுக்காக நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இளவரசியின் மானத்தைக் காக்க உழைப்பவனும், உன்னுடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பவனுமான அந்த ஜகதீசனைக்காண நான் மிக ஆவலுடையவளாக இருக்கிறேன். அவன் மிக உயர்ந்த குணதிசயங்களையுடையவனுயிருக்கவேண்டும்! ஆனுல் இப்போது நமது கற்பகவல்லியைப்பற்றிய விவரங்களைக் கூறு பார்ப்போம். அவள் யாரோ சில நல்ல சிநேகிதர்களுடன் இருப்பதாகவும், சுமார் ஒருவருஷ காலமாகவே அங்கேயே இருப்பதாகவும் நேற்றிரவு தெரிவித்தாயல்லவா?

கோம:—பச்சையப்பபிள்ளை என்பவரைப்பற்றி நான் தெரிவித்தேனல்லவா?

சுந்:—பச்சையப்ப பிள்ளையா? என்னசங்கதி? அந்தப் பெயரால் யாராவது ரத்தினபுரியில் இப்போது இருக்கிறுர்களா? என்ன? அப்படி யாரும் கிடையாதே.

சுந்தரம்மாள் இவ்வாறு ஆச்சரியத்துடனும் கலவரத்துடனும் பேசியதைக்கண்டு கள்ளங் கபடமற்ற கன்னிகையாகிய கோமளவல்லியும் திடுக்கிட்டுப்போய் மனக்குழப்பமடைந்தாள். பிறகு மறுபடியும் மெதுவாகச் சமாளித்துக்

கொண்டு, "அத்தையே! எனக்கு விஷயமொன்றும் விவரமாகத் தெரியாது. கற்பகவல்லியினிட மிருந்து எனக்குக் கிடைத்த கடிதங்களிலெல்லாம் அவள் பச்சையப்பபிள்ளை குடும்பத்தைப் பற்றியே பிரஸ்தாபித்து அவர்கள் அவளை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டதாகவும், அவர்களுடனேயே அவள் வசித்துவருவதாயும், அவர்கள் கொடுக்கும் பணத்திலிருந்துதான் எனக்கும் அனுப்பிவருவதாகவுந் தெரிவித்திருக்கிருள். நான் இரத்தினபுரிக்குச் சென்றிருந்தபோதும் அவர்களுடைய வீட்டில்தான் அவளைப் பார்த்தேன். ஆனுல் அப்போது பச்சையப்பபிள்ளையோ அவரது குடும்பத்தாரோ ஊரில் இருக்கவில்லை" என்று கலவரத்துடன் கூறினுள்.

இதைக் கேட்கவே அத்தை சுந்தரம்மாளுக்கு ஆச்சரியம் இன்னும் அதிகரித்துவிட்டது. "இதென்ன? எல்லாம் மாய மந்திரமாகவே இருக்கிறதே. இதில் ஏதோ பயங்கரமான சூழ்ச்சி இருக்கிறது. இருக்கட்டும். இக்கடிதங்களையெல்லாம் நான் நன்ருக நிதானித்துப் படித்துப் பார்க்க வேண்டும். நீ ஜன்னல் திறையை இழுத்துவிட்டுக் கீழே போய்க் காலை ஆகாரத்தைக் கவனி. இதற்குள் நான் இதைப் படித்துவிட்டு விஷயத்தை ஒருவாறு உணருகிறேன். நான் இப்போது கூறியவைகளைக் கொண்டு நீ ஒன்றும் பயப்படாதே. நீ மிகவும் நல்லவள் என்பதையும், கள்ளங் கபடமற்றவள் என்பதையும், சூதுவாது வஞ்சனை முதலியவற்றை அறியாதவள் என்பதையும் நான் அறிவேன். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பதேபோல் உன்முகமே உன் களங்கமற்ற தன்மையைக் காண்பிக்கின்றது" என்று ஆறுதல் கூறினுள்.

எனினும் மனக் கலவரமடைந்த கோமளவல்லி கண்ணீருங் கம்பலையுமாய், "அத்தையே! நமது கற்பகவல்லியின்

சம்பந்தமாய் நீ ஏதேனும் பயங்கரமான விஷயங்களை யூகிக்கிறாயா? நீ பேசுவதிலிருந்து ஏதோ சூழ்ச்சியும் ஆபத்தும் இருப்பதுபோலக் காணப்படுகிறது. ஆனால் உண்மையிலேயே எனக்கொன்றும் விஷயம் தெரியாது'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

சுந்த:—எனதன்புள்ள கோமளம்! எதையும் மறைக்க நான் விரும்பவில்லை. இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்பது நிச்சயம். அது இனி போகப்போகத்தான் வெளியாகவேண்டும். எனக்கும் ஏதோ எல்லாம் கலவரமாகத் தெரிகிறதேயொழிய விஷயம் விவரமாக விளங்குவதில்லை.

கோம:—ஆனால், பச்சையப்பபிள்ளையென்றோ அவரது குடும்பத்தாரென்றோ யாரும் இரத்தினபுரியில் கிடையாது என்று சொன்னாயே.

சுந்த:—விஷயம் அப்படியல்ல. ஒருவர் இருந்தார். ஆனால் அது அவருடைய உண்மையான பெயரல்ல. அவசியத்தையொட்டி அவ்வாறு வைத்துக்கொண்டார் அவ்வளவுதான்.—சரி; இருக்கட்டும். கற்பகவல்லி தனது கடிதத்தில் அருமைநாதம்பிரபு என்பவரைப்பற்றி ஏதேனும் எப்போதாவது பிரஸ்தாபித்திருக்கிறாளா ?

கோம:—என்ன? அருமைநாதம் பிரபுவா? இல்லை. அப்படியொன்றும் கற்பகவல்லி தனது கடிதத்தில் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் அப்பெயரைப்பற்றிச் சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தேன். பரிதிபுரம் சம்பவ சம்பந்தமாய் அனைவரும் பத்திரிகையை ஆவலோடு படித்தார்களல்லவா? அப்போது நானும் பத்திரிகை இரவல் வாங்கிப்பார்த்தேன். அதில் அருமைநாதம் பிரபுவைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட் டிருந்தது.

சுந்த:—இருக்கட்டும். பத்திரிகையிலாவது அவரைப்பற்றி என்ன படித்தாய் என்னும் விவரத்தைக்கூறு. என்ன சங்கதி என்ருவது தெரிந்துகொள்ளலாம்.

கோம:—அதாவது அருமைநாதம்பிரபு என்பவர் சுமார் ஒரு வருஷத்துக்குமுன் திடீரென்று மறைந்து விட்டதால் அவரது குமாரரும் இதர பந்துஜன மித்திரர்களும் மிகவும் மனம் வருந்திக்கொண் டிருந்தார்களென்றும், இப்போது அவர் அகப்பட்டுவிட்டாரென்றும் அதில் தெரிந்தது.

சுந்:—என்ன! உயிருடன் அகப்பட்டாரா?

கோம:—இல்லை. அவருடைய பிரேதம் ரத்தினபுரிக்கருகிலுள்ள ஒரு மாளிகையின் தோட்டத்தினின்றும் எடுக்கப்பட்டதாகவும், அதை முறைப்படி புதைத்துவிட்டதாகவும் கண்டேன். பத்திரிகையிலும் விஷயம் சுருக்கமாகத்தான் இருந்தது.

சுந்:—இப்போது நீ கூறியதிலிருந்து கற்பகவல்லியின் சம்பந்தமான மர்மம் இன்னும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியதாய்ப் போய்விட்டது. இதில் ஏதோ பலவித இரகசியங்களும் மர்மங்களும் பொதிந்து கிடக்கின்றன.

கோம:—அத்தையே! நீ பேசுவதிலிருந்து எனக்குப் பயம் அதிகரிக்கிறது. நமது கற்பகவல்லிக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டிருக்குமோ? இரத்தினபுரியானது மிகவும் அபாயகாமான நகரம். அங்கே உயர்தர குடும்பத்தினர் எவருமே பரிசுத்தமாக இல்லை. ஆ! அந்த சுகசிங்கம்பிரபுவின் சகோதரின் குமாரியான தெய்வயானை நாகரிக உலகின் விசித்திரங்களைப்பற்றியெல்லாம் வர்ணித்து என்னை மயக்கமுயன்ருளே! என்னென்று

கூறுவேன். ஆபாசம். எல்லாம் கொலை, களவு, கள், காமமாகவே இருக்கிறது. அதைத்தான் அவள் சிறப்பித்துக் கூறினள். மேலும் அவள் குறிப்பாக யாரோ மதனவல்லி என்னும் ஒரு அழகிய மாதைப்பற்றிக் கூறினள். ஐயையோ! அவள் தன் அழகைத் துணையாகக்கொண்டு பெரிய பட்டம் பதவிகளையெல்லாம் பெற்றுளாம். அவள் பிறகு செல்லப்பப்பிரபு என்பவரையும் மணந்துகொண்டாளாம். அத்துடன் மட்டுமா? அவள் இளவரசரின் அந்தரங்கக் காதலியாகவும் புருஷன் சம்மதத்துடனேயே இருக்கிறுளாம்!

சுந்:—கோமளம்! இதெல்லாம் நமக்கேன்? நாம் பேச எடுத்துக்கொண்ட விஷயத்துக்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தமுண்டோ?

கோம:—அப்படியொன்றும் சம்பந்தமில்லை. ஆயினும் அந்த மதனவல்லி என்பவளைப்பற்றிக் கூறப்படுவதைச் சிந்திக்கும்போதெல்லாம் நமது கற்பகவல்லியைப் பற்றியும் எனக்கு அச்சம் உண்டாகின்றது. ஏனெனின், அவ்வளவு பெரிய ரத்தினபுரிபோன்ற தற்கால நவீன நாகரிகம் தலைவிரித்துத் தாண்டவமாடும் இடங்களில் நமது கற்பகம் போன்ற அழகும் யௌவனமும் வாய்ந்த மாதர்கள் பரிசுத்த வாழ்வை நடத்தமுடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. அத்தையே! நீ கற்பகவல்லியைப் பார்த்து ஒரு வருஷத்துக்குமேலாய்விட்டது. இந்த ஒரு வருஷத்தில் அவள் எவ்வளவு ரூபலாவண்யமுடன் வளர்ந்திருக்கிறுள் தெரியுமா? அவளை நான் ஐந்தாறு மாதங்களுக்குமுன் ரத்தினபுரியில் பார்த்தபோது அவளது வளர்ச்சியைக் கண்டு நானே பிரமித்துவிட்டேன் அவளுடைய அழகையும் கம்பீரத்தையும்

கண்டு நான் பெருமையடைந்தேன். ஆ! இன்று நீ சொஸ்த மடைந்துவிட்டாய் என்றும், உடனே புறப் பட்டுவர வேண்டுமென்றும் அவளுக்குக் கடிதம் எழுத எனக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது தெரி யுமா? அவளும் உன்னைக்காண மிக ஆவலுடன் இருக் கிறாள். ஒவ்வொரு கடிதத்திலும் பார்! உன்னைப்பற்றி மிக அன்புடனும் ஆதாவுடனும் விசாரித்திருக்கின்றாள்.

சுந்:—அப்படியானால் நான் அக்கடிதங்களையெல்லாம் நிதான மாகப் படித்துப் பார்க்கிறேன். நீ கீழேபோய் சுமார் இரண்டொரு மணிநேரம் கழித்துவா. அப்போது இதைப்பற்றி இன்னும் அதிக விவரமாகப் பேசலாம்.

கோமளவல்லியும் அப்படியே அத்தையினிடம் உத் தரவு பெற்றுக்கொண்டு அவ்வறையை விட்டுச் சென்று கீழே இறங்கினாள். அங்கே காலை ஆகாரம் தயாரிக்கப்பட் டிருந்தது. அப்போது மணி எட்டரையாயிருந்தது. கோம ளம் பதார்த்தங்களையெல்லாம் ஒரு தட்டில் வைத்து வேலைக் காரியின் மூலம் தன் அத்தைக்கென மாடிக்கு அனுப்பினாள். ஆனால் அவள் மட்டும் ஒன்றும் அருந்தவில்லை. ஏனெனின், அவள் மனம் பலவித கவலைகளில் மூழ்கலாயிற்று. விசாரம் அதிகரித்துவிட்டது. அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. உலக விவகாரங்கள் அறியாத சிறுமி. பல விஷயங்களைக் கேட்டதும் திடுக்கிட்டு மனம் குழம்பிவிட்டாள். தன் காதலன் விரைவில் வெற்றியுடன் திரும்பி வரப்போகிறான் என்பதிலும் அவளுக்கு அதிக சந்தோஷமே. ஆனால் சுந்த ரம்மாள் பேசியதிலிருந்து தன் சகோதரி கற்பகவல்லியின் விஷயத்தில்தான் அவளுக்குப் பல சந்தேகங்களும் அச்சங் களும் தோன்றலாயின. சரி, ஆனால் சந்நியாசி சுகானந்தன் விஷயமாய்க் கோமளவல்லியின் அபிப்பிராயமென்ன? அதைப்

பற்றிப் பிரஸ்தாபிக்காமலே மறந்துவிடுவதென்பது அவள் அபிப்பிராயமா? என்று நேயர்கள் கவனிக்கலாம். அப்படியல்ல. அவனுடைய துஷ்டச்செயல்கள் முழுதும் அவள் ஞாபகத்துக்கு வராமற்போகவில்லை. ஆனால் விரைவில் ஜகதீசன் வரப்போகிறபடியால், அவன் வந்ததும் அதை அவனிடம் தெரிவித்துவிட்டு எதையும் அவன் முடிவுக்கு விட்டுவிடுவதெனத் தீர்மானித்தாள்.

இவ்வாறு பலவாறு சிந்தித்துக்கொண்டே கோமளவல்லி தன் காலை ஆகாரத்தையும் எடுத்துக்கொள்ளாமல் வீட்டினின்றும் புறப்பட்டு அவ்வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தில் தெருவாயிலின் பக்கம்வந்து உலாவிக்கொண்டிருந்தாள். இதற்குள் மணியும் ஒன்பது அடித்தது. உடனே அவள் தன் வேலைக்காரியை மாடிக்கு அனுப்பி, அத்தை கடிதங்களையெல்லாம் படித்தாயிற்றா யென்றும், தான் வந்தால் மேற்கொண்டு விஷயங்களைப் பேசமுடியுமா யென்றும் அறிந்துவரும்படி அனுப்பினாள். வேலைக்காரியும் அத்தையிடம் சென்று விசாரித்ததில் இன்னும் பூரா கடிதங்களையும் படிக்கவில்லையென்றும், விஷயங்களைப்பற்றிப் பேசமுடியாதென்றும் தெரிந்தது. ஆகவே கோமளவல்லி மற்றும் சொற்பநேரம் அங்கேயே உலாவிக்கொண்டிருந்தாள். அப்போது தபாற்காரன் அங்கேவந்து அவளிடம் ஒரு கடிதம் கொடுத்துவிட்டுப் போனான். அதைக் கண்டமாத்திரத்தில் அது தன் சகோதரி கற்பகவல்லியால் எழுதப்பட்டதென்பதை அறிந்ததும் மிக ஆவலுடன் பிரித்துப்படித்தாள்.

அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—"எனதன்புள்ள தங்கையே! நான் இதை மிக அவசரமாக எழுதுகிறேன். இன்று செவ்வாய்க்கிழமை. நான் புதன்கிழமையாகிய நாளையதினமே காலையில் ஒன்பதுமணிக்கு இங்கிருந்து

புறப்பட்டுப் பகல் மூன்றுமணிக்குக் கந்தபுரிக்கு வருகிறேன். உடனே நேராக நமது வீட்டுக்கு வருவேன். நம்மைப்பற்றிய ஒரு இரகசியம் வெளியாயிருக்கிறது. அதாவது நமது பிறப்பைப்பற்றிய ஒரு இரகசியம். இதுவரை நாம் எதிர்பாராத விஷயம். நான் தனியாக வரவில்லை. இந்த இரகசியத்தை எனக்கு அறிவித்த மதுரைநாயகம் பிரபுவும் என்னுடன் வருகிறார். அன்புள்ள கோமளம்! இதுமட்டுமல்ல. என்னைப்பற்றிய சில விஷயமும் உனக்குத் தெரியவேண்டும். திடீரென்று கேட்டுத் திடுக்கிடக்கூடாதல்லவா? அதற்காக முன்னுடியே உபாயமாகத் தெரிவித்து வைக்கிறேன். எனக்குக் கலியாணமாய்விட்டது. ஆம். அக்கலியாணத்தால் இவ்வுலகமுறையில் நாம் பெருமைப்பட வேண்டியதுதான். ஆனால் என்னுடன் நாளை வரப்போகும் மதுரைநாயகம்பிரபு எனது கணவனல்ல. என் கணவன் நாளை என்னுடன் வரப்போவதில்லை. இதற்குமேல் இப்போது ஒன்றும் கூறமுடியாது. நமது அத்தையை சௌக்கியத்துடன் காண நான் ஆவலுடையவளாயிருக்கிறேன். உன் அன்புள்ள கற்பகவல்லி.''

இக்கடிதத்தைப் படித்ததும் சிறுமி கோமளவல்லி அளவிலா மகிழ்ச்சியடைந்தாள். அதைப்பற்றி ஒன்றும் சிந்திக்கவுமில்லை. உடனே அக்கடிதத்துடன் தன் அத்தையிருந்த அறைக்குப் பறந்து சென்றாள். சென்றதும், "அத்தை! இதோ கடிதத்தைப்பார். கற்பகவல்லி இன்று பகல் மூன்று மணிக்குமேல் நான்கு மணிக்குள்ளாக இங்கே வரப்போகிறாள். அவளுக்குக் கலியாணமும் ஆகிவிட்டது. சரியான சம்பந்தம்!'' என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தைச் சுந்தரம்மாளிடம் கொடுத்தாள்.

கோமளம் அதிக வேகமாகத் தன்முன் வந்ததையும், மேற்கூறியவாறு ஆத்திரத்துடன் பேசியதையும் கேட்ட சுந்

தரம்மாள் ஆச்சரியத்துடன் உற்று நோக்கி அக்கடிதத்தை வாங்கிக்கொண்டு அவசரமாக அக்கடிதம் முழுதையும் பார்த்துவிட்டுத் தன் படுக்கையில் சாய்ந்தவண்ணம், "ஐயோ கடவுளே! எப்படியாவது இருக்கட்டும். கற்பக வல்லி விவாகம் என்று ஒன்று செய்துகொண்டு விட்டிருக் கிறாள். அதுவே போதுமானது" என்றாள்.

தன் சகோதரி இன்னும் சிலமணி நேரத்துக்குள் வரப் போகிறாள். அவளை வாரியணைத்துக் கொள்ளப்போகிறோம் என்னும் ஆவலில் மூழ்கிய கோமளவல்லி, சுந்தரம்மாள் சொன்னதையும் கவனியாமல், "என்ன அத்தை! கற்பக வல்லி வருவதற்காக நீ சந்தோஷப்படவில்லையா? அவள் நல்ல இடத்தில் விவாகம் செய்துகொண்ட விஷயத்தில் உனக்குச் சந்தோஷமில்லையா?" என்று மிக ஆர்வத்துடன் கேட்டாள்.

அப்போது சுந்தரம்மாள் தன் எதிரில் படுக்கையின் மீது கிடக்கும் கடிதங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே கற்பகவல்லியின் கற்பிலும், உண்மையிலும் சந்தேக சித்த முள்ளவளாய், 'எனக்கும் சந்தோஷந்தான்' என்று ஒரு வார்த்தையில் பதில் கூறினாள்.

அதற்குக் கோமளவல்லி, "அத்தையே! ஏதோ நமது பிறப்பு சம்பந்தமான இரகசியம் வெளியாயிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறதே. அது என்னசங்கதி? உனக்கும் தெரி யாத இரகசியம் என்ன இருக்கப்போகிறது? எங்களுடைய அன்புள்ள தந்தை உன் சகோதரர் அல்லவா? அவர் யுத்தத் தில் கொல்லப்படவில்லையா? அவர் அவ்வாறு இறந்த துக் கத்தாலல்லவோ எங்கள் தாயாரும் மனமுடைந்து மாண் டாள்? என்று பல கேள்விகளைக் கேட்கலானாள்.

அப்போது சுந்தரம்மாள், "இதைப்பற்றி இப்போது நாம் அதிகம் ஒன்றும் பேசக்கூடாது. அதுமட்டு மல்ல. எதைப்பற்றியுமே இப்போது நாம் ஒன்றும் பேசவேண்டாம். கற்பகவல்லி இன்று இங்கு வரப்போவதில் எனக்கும் மிகச் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. அவள் வந்ததும் எல்லா மர்மங்களும் இரகசியங்களும் வெளியாய்விடுகின்றன. எதற்கும் அவளுக்குக் கலியாணம் ஆகிவிட்டது பற்றி நாம் கடவுளுக்கு வணக்கம் செலுத்தவேண்டியதே" என்று கூறினாள்.

164 - வது அத்தியாயம்

நேயர்காள்! இப்போது நாம் ஒரு விஷயத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவரவேண்டும். அதாவது சுகானந்தனுடைய தோட்டத்தில் அதற்கு முன்னாள் மரகதவல்லியும் லீலாவதியும் சந்தித்துப் பரஸ்பரம் இருவரும் சகோதரிகள் என்று அறிந்துகொண்ட பின்னர் மரகதவல்லி தன் குமாரியைக் காணக் கோமளவல்லியின் வீட்டுக்குச் செல்ல விடைபெற்றபோது கந்தபுரியிலுள்ள பவுண்டன் ஓட்டலில் மரகதவல்லியைச் சந்திப்பதாக லீலாவதி ஒப்புக் கொண்டதைத்தான் இப்போது நாம் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டும். அதன்படியே மறுநாள் அதாவது கற்பகவல்லி வரப்போவதாகக் கோமளத்துக்கு அறிவித்திருக்கும் அதேநாளில் பகல் இரண்டு மணிக்கு லீலாவதி பவுண்டன் ஓட்டலுக்குச் சென்று மரகதவல்லியும் அவளது குமாரி மீனும்பாளும் இருந்த அறையை அடைந்து அவர்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் மீனும்பாளுக்குப் புதியவளல்லவா? ஆகவே அவள் மீனும்

பாளின் கையைப் பிடித்துக்கொண்டு. "பெண்ணே! நீ சூது வாது அறியாத பரிசுத்த உள்ளமுடையவளாக இருக்கின்றாய். கடைசிவரை இப்படியே இருப்பாயாக" என்றாள். இதற்குள் அப்பெண்ணின் தாயாரும், "மீனு! உன் சிறிய தாயாரை அணைத்துக்கொள்" என்றாள். அவளும் அப்படியே செய்தாள். மரகதவல்லியும், லீலாவதியிடம், "மீனுவுக்கு நீ அவள் சிறிய தாயார் என்பதும், பாரிசநோயால் கிடக்கும் சுந்தராம்மாளும் பெரிய தாயார் என்பதும், கோமளவல்லி சகோதரி என்பதும் தெரியும்" என்றாள்.

லீலாவதி:—ஓ! அப்படியானால் நீ உன் குமாரியிடம் சில விவரங்களைக் கூறிவிட்டாய் போலும்!

மரகதம்:—ஆம், சில விவரங்களைத்தான் கூறியிருக்கிறேன்.

பிறகு மரகதவல்லி தன் குமாரியை நோக்கி, மற்றொரு அறையில்போய்ப் படுத்துக்கொள்ளும்படியும், தானும் லீலாவதியுமாக அதிக விஷயங்களைப் பேசவேண்டியிருக்கிறதென்றும், மேலும் அவர்களிருவர் மட்டுமே தற்சமயம் சுந்தராம்மாளின் விடுதிக்குச் செல்வதாகவும், மாலையில் திரும்பி வந்து மீனுவையும் அழைத்துச் செல்வதாயும், இன்றேல் அங்கிருந்தே கோமளத்தின் வேலைக்காரியை அனுப்புவதாயும் கூறினாள்.

அதற்கு மீனும்பாள், "அப்படியே ஆகட்டும். ஆனால், சுந்தராம்மாள் வீட்டுக்குப் போனபிறகு என்னையும் அங்கு வரவழைத்துக்கொள்ள மறந்துவிடாதீர்கள். நான் கோமளத்தை சகோதரி என்று அழைக்க ஆவலுள்ளவளாக இருக்கிறேன்" என்று பதில் அளித்தாள்.

மீனும்பாள் அவ்வறையை விட்டுச்சென்ற பின்னர், லீலாவதி தனது சகோதரியாகிய மரகதத்தினிடம், "அப்

படியானல் நீ யார் என்பதைக் கோமளவல்லிக்குத் தெரி வித்து விடுவதென நிச்சயித்துவிட்டாயா?" என்று கேட் டாள்.

அதற்கு அவளும், "ஆம், நான் நேற்று உன்னைவிட்டுப் பிரிந்தபின்னர் சுந்தரம்மாளின் விடுதியில் கோமளத்துடன் நேற்றுபகல் முழுவதும், இரவு சிறிதுநேரமும் கழித்தேனல் லவா? அவள் மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் நடந்து கொண்டாள். அவள் நல்ல சுபாவமுடையவள். என் மூத்த குமாரிகள் விஷயமாக நான் நடந்துகொண்டதைக் கவனித்து அதற்குத் தண்டனையாகத்தான் இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவிக்க நேர்ந்ததாகவும் கூறினள். நானும் அவள் கூறி யதையெல்லாம் நன்கு உணர்ந்தேன். மனத்துன்பம் வந்த பிறகு தான் நாம்செய்த தீவினைகளின் கொடுமை நமக்கே புலனுகிறது," என்று கூறினள்.

அம்மாது:—அவர்கள் இருப்பிடம் எனக்குத்தெரியும். வேண்டு மானல் அவர்களுக்கு ஆளனுப்பித் தெரிவிக்கிறேன்.

பிறகு அச்சகோதரிகளிருவரும் நீண்டநேரம் ஏதேதோ பழைய விஷயங்களைப்பற்றி யெல்லாம் பேசிக்கொண்டிருந் தார்கள். பற்பல சந்தர்ப்பங்களைப்பற்றிய விவரங்களையெல் லாம் பரஸ்பரம் விவரித்துக்கொண்டார்கள். இத்தகைய விவ ரத்தின்போது நான்கு சகோதரிகளான சுந்தரம்மாள், மரகத வல்லி, லீலாவதி, மேனகை ஆகியவர்களின் விவரங்களையும் கூறவேண்டும். ஆனல் அதற்கு இது சந்தர்ப்பமல்ல. இந்த இரு சகோதரிகளும் தாங்கள் இதுவரை இழைத்த மகா பாபகரமான காரியங்களுக்காகவெல்லாம் மனமார வருந்திக் கண்ணீர்விட்டழுதார்கள். ஏன்? இருவருமே தங்கள் பாவச் செயலுக்கேற்ப இவ்வுலகிலேயே நாகதண்டனையை அனுப வித்துவிட்டார்கள். அவர்கள் விவரமாகப் பேசிமுடித்தபின்

னர் சுந்தரம்மாளின் விடுதிக்குச் சென்று கோமளத்தினிடம் அவளுக்கும் தங்களுக்குமுள்ள பந்துத்வத்தை விவரிப்பதென நினைத்தார்கள். அப்படியே சுந்தரம்மாளின் தேகஸ்திதியையும் கவனிப்பதென எண்ணினர். ஆனால் அவள் இறைவன் அருளால் எதிர்பாராதவிதமாய்த் திடீரென்று சொஸ்தமடைந்ததை இவர்கள் அறியார்.

மாகதவல்லியும் லீலாவதியும் புறப்படத் தயாரான போது, நான்கு குதிரைகள் பூட்டிய பெரிய வாடகை வண்டியொன்று அந்த ஓட்டலின் வாயிலின் முன் வந்து நின்றது. ஆகவே அந்த வண்டியிலிருந்து யார் இறங்குகிறார்கள் என்பதைக் கவனிப்பதற்காக அம்மாதர் இருவரும் தங்கள் அறையிலேயே நின்று கவனித்தனர். அவ்வண்டியினின்றும் முதலில் உயரமும் அழகும் வாய்ந்த ஒரு யௌவன மனிதன் இறங்கினான். அவன் மற்றொரு மாது இறங்குவதற்குக் கைகொடுத்து உதவினான். அப்படியே ஒரு யௌவன மாது இறங்கினாள். அவள் முகமூடி யணிந்திருந்ததால் அவள் யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லையென்றாலும், அவள் இறங்கியபோது, காற்றில் அவள் முகமூடி சிறிது விலகியபடியால் உடனே ஜன்னலிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த மாகதவல்லி எப்படியோ அவள் இன்னாளெனத் தெரிந்துகொண்டு, "அதோ செல்லப்பப்பிரபுவின் மனைவி மதனவல்லிச் சீமாட்டி" என்று வாய்விட்டுக் கூறினாள்.

அப்போது லீலாவதி, "என்ன? மதனவல்லியா? ரத்னபுரி முழுவதிலுமே அழகிற் சிறந்தவள் எனப் பெயர்பெற்றிருக்கிறாளே அவளா? இளவரசிக்குக் காதலியாமே அந்த மாதி?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள். அதற்கு மாகதவல்லி, "ஆம்; அவள்தான். அதோ பார்! எவ்வளவு அவசரமாகத் தன் முகத்தை மூடிக்கொள்கிறாள். ஓட்டல்

சேவகர்கள் யாரும் அவள் யாரென்று தெரிந்துகொள்ளக் கூடாதாம்" என்று கூறினாள்.

லீலாவதி:—உனக்கு மதனவல்லி தெரியுமா?

மரகதம்:—நான் அவளுடன் பேசியதில்லை. ஆனால் அவளை ரத்தினபுரியில் பலமுறை கண்டிருக்கிறேன். அவளுடன் இருக்கும் ஆடவன் அவளுடைய புருஷனல்ல. நான் செல்லப்பப்பிரபுவைப் பார்த்திருக்கிறேன். அதோ அந்தப் புருஷன் செல்லப்பப்பிரபு அல்ல. ஓ! அவள் வேறு யாரோ ஆடவனுடன் ஓடி வந்துவிட்டிருக்க வேண்டும் என்பது நிச்சயம்.

லீலா:—எனதன்புள்ள சகோதரியே! நாம் நமது விஷயத்தைப்பற்றிப் பேசுவதைவிட்டு மற்றொருவரைப்பற்றிப் பேசவேண்டாம். இதோ மணி மூன்று அடிக்கிறது. சுந்தரம்மாளின் விடுதிக்குச் செல்வோம். மீனவும் மீண்டும் இன்று மாலைக்குள் கோமளத்தைப் பார்க்கக்கூடிய ஏற்பாடு செய்வதாகச் சொன்னதை மறந்துவிடவேண்டாம்.

மரகதவல்லியும், 'அப்படியானல் வா போவோம்' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டாள். இரு சகோதரிகளுமாக அந்த ஓட்டலைவிட்டுப் புறப்பட்டனர். புதிதாக வண்டியில் வந்து இறங்கியவர்களைப்பற்றியும் பிறகு அவர்கள் கவனிக்கவில்லை. அவர்கள் சாசரவென்று நடந்து சென்று குறுக்கு வழியில் பாய்ந்து கந்தபுரிக்கு அப்பாலுள்ள தோட்டத்தில் அமையப்பெற்ற சுந்தரம்மாளின் விடுதிக்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

கோமளவல்லி சுந்தரம்மாள் படுத்திருந்த அறையில் உட்கார்ந்துகொண்டே அதன் ஜன்னல் வழியாகத் தன் சகோ

தரி கற்பகவல்லி வருகிருளா என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் மாகதவல்லி வருவதையும் அவளுடன் மற்றொருமாது அவளைப்போலவே உடையணிந்து வருவதையும் கண்டாள். அந்த மற்றொரு மாதுதான் ஒரு வருஷத்துக்குமுன் அந்தப் பாழும் சுகானந்தன் சூழ்ச்சியினுல் மடத்தின் இரகசிய அறையில் தான் அகப்பட்டுக் கொண்டபோது தனக்கு உதவிசெய்து விடுவித்தவள் என்பதையும் ஒருவாறு கோமளம் யூகித்தறிந்தாள்.

உடனே கோமளவல்லி அவர்களுடைய வருகையை சுந்தராம்மாளிடம் அறிவித்துவிட்டுத் தான் கீழே இறங்கி வந்து இருவரையும் ஆவலுடனும் அன்புடனும் வரவேற்று, "என்னு அத்தைக்குத் திடீரென்று எதிர்பாராத வகையில் தேகம் சொஸ்தமாய்விட்டது. அவள் இப்போது நல்ல அறிவுடன் இருக்கிருள். உங்களை உடனே பார்க்க மிக ஆவலுடன் இருக்கிருள். நாம் இப்போது ஒன்றும் பேச வேண்டாம். நீங்கள் நேராக மேலே வாருங்கள்'' என்று கூறிக்கொண்டே மேலே அழைத்துச் சென்ருள். சுந்தரம்மாள் திடீலென்று சொஸ்தமடைந்தாள் என்பதைக் கேட்டு மாகதவல்லியும் லீலாவதியும் ஆச்சர்யமும் சந்தோஷமும் அடைந்தார்கள். மாடிக்குச் செல்லும் வழியில் மாகதம் கோமளத்தினிடம், "அதெப்படி? இவ்வாறு ஆச்சர்யமாகத் திடீரென்று சுந்தரம்மாள் சொஸ்தமடைந்தாள்? என்ன சந்தர்ப்பம் நேரிட்டது? விவரம் கூறு'' என்று கேட்டாள்.

அப்போது கோமளம், "நீ முதலில் என் மீனுவை அழைத்து வரவில்லை என்பதைக்கூறு. அவள் சௌக்கியமாகவே இருக்கிருள் என்று நம்புகிறேன்,'' என்று கேட்டாள்.

மரகதம்:—ஆம். அவள் சௌக்கியமாகவே இருக்கிறாள். அவள் இன்று மாலை இங்கு வருவாள். இந்த ஆச்சர்யமான சம்பவம் எப்படி ஏற்பட்டது என்பதை விவாமாகத் தெரிவி.

கோமளம்:—நேற்று ராத்திரி நீங்கள் இங்கிருந்துபோன சற்று நோத்துக்கெல்லாம் இச்சம்பவம் நிகழ்ந்தது. நீங்கள் இன்று இங்கு வருவதென்று இல்லாவிட்டால் நேற்று இரவே ஒரு துண்டு கடிதத்தில் இதைப்பற்றி எழுதி யனுப்பி இருப்பேன். மேலும் உடனே எனக்குப் பல வேலைகள் நேர்ந்துவிட்டதில் அவ்வாறு எழுதி யனுப்ப முடியவில்லை.

மரக:—அது சரி. நேற்று நிகழ்ந்திருக்கலாம். என்ன சம்பவம் என்று கூறுமலேயே இருக்கிறாயே? பாரிசநோய் திடீரென்று தீர்ந்துவிட்டதல்லவா? என்ன சந்தர்ப்பம், எப்படி நேரிட்டது?

கோம:—'இல்லை, இல்லை. திடீரென்று ஒரு காரணமுமில்லாமல் நோய் தீர்ந்து விடவில்லை. அது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அச்சமயத்தில் எனக்குப் பெரிய ஆபத்து வரும்போலிருந்தது.' என்று கூறியவள் திடீரென்று தன்பேச்சை நிறுத்திக்கொண்டு மாகதவல்லியுடன் இருந்த மற்றொருமாதை உற்று நோக்கி அவள் தான் முன்பு தன்னைக் காப்பாற்றியவளா யிருக்க வேண்டுமென்று சிந்தித்தாள்.

அப்போது லீலாவதி கோமளத்தினிடம் இனிய குரலுடன் மெதுவாக, "நான் உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமென நீ நினைக்கிறாயா? உன் மனதில் இப்போது என்ன தோன்றுகிறதென்பதை நான் அறிந்துகொண்டேன். ஆம். நாம் இருவரும் இதற்குமுன் சந்தித்திருக்கிறோம். அதில்

சந்தேகமில்லை. நான் முன்பு உன்னைக் கேட்டுக்கொண்ட படி ஒரு விஷயத்தைப்பற்றி வெளியில் பிரஸ்தாபிக்காமல் இருப்பதற்காக நான் உனக்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே கோமளவல்லியின் கையை அன்புக்கறிகுறியாக மிருதுவாகப் பிடித்து விட்டாள்.

அதற்குக் கோமளம், "ஓ, அம்மையே! அப்படிச் சொல்லாதே. நீ சமயத்தில் அங்குத்தோன்றி எனக்கு உதவி செய்து அக் கொடியோனிடமிருந்து விடுவித்ததற்காக நானல்லவோ உனக்கு வந்தனம் செலுத்தவேண்டும்?" என்று பரிந்து பேசினள்.

அச்சமயத்தில் மரகதவல்லி, "சுந்தரம்மாள் எப்படி சொஸ்தமடைந்தாள் என்பதைச்சொல். வேறு எதையோ பேச ஆரம்பித்து விட்டீர்களே" என்று கேட்டாள். அப்போதும் கோமளவல்லி ஒன்றும் பதில் சொல்லாமல் லீலாவதியை உற்று நோக்கியவண்ண மிருந்தாள். அப்போது லீலாவதி, "பெண்ணே! உன் மனதிலுள்ள விஷயங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிகிறது. என்ன ஏற்பட்டிருக்கலாமென்பதுபற்றிச் சில சந்தேகங்கள் என்மனதிலும் எழுகின்றன. அந்தக் குறிப்பிட்ட மனிதன் சம்பந்தமாய் ஏதோ நடைபெற்றிருக்கிறது போலும்? கோமளம்! உண்மையைச் சொல். இவ்வளவு தாராளமாகப் பேசுவதுபற்றி என்னை மன்னித்துக்கொள். ஆனல் அவ்வாறு நெருங்கிப்பேச எனக்குப் பாத்தியமிருக்கிறதென்பதை நீ இப்போது அறிவாய். ஆகவே சிறிதும் அஞ்சாமல் தைரியமாய் நடந்ததை என்னிடம் தெரிவி." என்று கேட்டாள்.

அதற்குக் கோமளவல்லி "நீங்கள் இவ்வளவு தூரம் கேட்கிறபடியால் உள்ளபடி நடந்ததைச் சொல்லிவிடு

கிறேன். கேளுங்கள். நேற்றிரவு அந்தப்படுபாவி சுகானந்தன் எப்படியோ திருட்டுத்தனமாக என் அறையில் புகுந்துவிட்டான். அவன் மிகக்கேவலமாகவும், முரட்டுத்தனமாகவும் நடந்துகொள்ள ஆரம்பித்தான். ஆனால் நான் ஓவென்று கூச்சலிட்டேன். அந்த அழுகைச்சத்தம் நமது அத்தையின் செவியில் விழுந்ததும், மூன்று வருஷங்களாக வைத்தியர்களால் செய்யமுடியாத காரியத்தைச் சாதித்துவிட்டது. நான் துன்பப்படுவதைக் கடவுள் விரும்பவில்லை. ஆகவே இறைவன் அருளால் என் கூச்சலானது என் அத்தையின் பாரிச நோயை நீக்கி அவள் உடனே எனக்குத்துணையாக எனது அறைக்கு வரும்படி செய்தது. உடனே அந்தக்கொடியோன் ஓடி மறைந்தான்'' என்று நடந்த விவரத்தைக் கூறினாள்.

இதைக்கேட்டதும் லீலாவதிக்கு அடக்கமுடியாத ஆத்திரமும் கோபமும் வந்தது. "அயோக்கியன், அப்படியா செய்தான்'' என்று கண்களில் கோபத்தணல் வீசக் கூறினாள். மாரகதவல்லியோ, "ஆ, எல்லாம் கடவுள் செயல். எதிர்பாராமல் இவ்வாறு நடந்திருப்பதும் அவனது திருவருளே'' என்று வேதாந்தம் பேசினாள்.

அப்போது கோமளவல்லி, "ஐயையோ! நான் இவ்வளவு நேரமாக உங்களை இங்கே தாமதப்படுத்திவிட்டதற்காக வருந்துகிறேன். நீங்கள் வந்ததும் உங்களை நேரே தன்னிடம் அனுப்பும்படி என் அத்தை கண்டிப்பான கட்டளை இட்டிருக்கிறாள். ஆகவே நீங்கள் உடனே மேலே செல்லுங்கள். நான் இங்கேயே வேறொரு வேலையாக இருக்கவேண்டும்'' என்று சொல்லிவிட்டு அவர்களை மேலே அனுப்பிவிட்டுத் தான்மட்டும் கீழேயே இருந்தாள்.

மாகதவல்லியும் லீலாவதியும் மேலேசென்று தங்கள் சகோதரியாகிய சுந்தரம்மாளைக் கண்டதும், அவர்கள் என்னென்ன பேசினார்கள், அங்கே என்னநடந்தது என்னும் முழு விஷயங்களையும் இப்போது நாம் கவனித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. சுந்தரம்மாள் இயற்கையிலேயே பெருந்தன்மையும் மன்னிக்கும் சுபாவமுமுடையவளாதலால் தன் சகோதரிகளிருவரையும் அவள் கண்டிக்கவுமில்லை, வெறுக்கவுமில்லை. அவர்களும் தங்கள் குற்றத்துக்காக உண்மையில் மனமார வருந்தினார்கள். ஆகவே மூவரும் பரஸ்பரம் அன்புடையவர்களாயும், விசுவாசமுடையவர்களாயும் கலந்துகொண்டனர்.

இவ்வாறு கால்மணிநேரம் கழிந்தது. கோமளவல்லி கீழேயே இருந்துகொண்டு ஜன்னலின் வழியாகத் தன் சகோதரி வருகிறாளோ என்று கவனித்துக்கொண்டிருந்தாள். இதற்குள் சுந்தரம்மாள் மணி அடித்ததும் வேலைக்காரி மேலேபோய் விஷயத்தை விசாரித்ததில் கோமளவல்லியே தேவை என்று தெரிந்தது. கோமளவல்லியும் ஏதோ மர்மம் வெளியாகப் போகிறதென்னும் ஆவலுடன் மாடிமீது ஏறிச்சென்றாள். அவள் அங்குச் சென்றபோது அச் சகோதரிகள் மூவரும் கண்ணீர்விட்டுத் துக்கித்துக்கொண்டிருந்ததைக் கண்டாள். ஆனால் அவர்கள் மூவரும் துக்கத்துடன் சந்தோஷமும் அடைந்த அறிகுறிகளும் தோன்றாமற் போகவில்லை. அப்போது சுந்தரம்மாள் கோமளத்தை அருகில் அழைத்து, "கோமளம்! இன்றுதான் எல்லா மர்மங்களும் வெளியாகும் நாளாக இருக்கிறது. இவர்களிருவரும் என் சகோதரிகள் என்பதை அறிவாயாக. இத்தனை நாள்வரை உன்னுடன் நட்பினளாக இருந்த மீனு உன் சகோதரி என்பதையும் தெரிந்துகொள்," என்று கூறினாள்.

இதை கோமளவல்லியும் மிக ஆச்சர்யத்துடன் கேட்டறிந்தாள். அவள் உடனே முதலில் மரகதவல்லியையும் பிறகு லீலாவதியையுமாக அணைத்துக்கொண்டாள். அவ்விருமாதர்களும் முறையே கோமளவல்லியைத்தழுவி உச்சிமுகர்ந்து அன்புடன் ஆசி கூறினார்கள்.

பிறகு சுந்தராம்மாள் கோமளத்தினிடம், "இப்போது நீ மீண்டும் கீழே போகலாம். பிறகு சாவகாசமாக நான் இது சம்பந்தமான சில விஷயங்களை உனக்கு விவரித்துக் கூறுவேன். ஆகவே தற்சமயம் நீ கீழேபோய் நீ யாரை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிருயோ அவள் வருகையை நோக்கிக்கொண்டிரு" என்று கூறினள். கோமளவல்லியும் அப்படியே மாடியைவிட்டுக் கீழே இறங்கினள். அவள் கீழே வந்ததுமே யாரோ தெருக்கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. உடனே தன் சகோதரியாகத்தான் இருக்க வேண்டுமென்னும் நிச்சயத்துடன் மிக ஆவலாகக் கதவைத் திறந்தாள். அப்படியே கற்பகவல்லிதான் அங்கு வந்திருந்தபடியால் உடனே இருவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் தழுவி ஆனந்தம் தெரிவித்துக் கொண்டனர். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். இருவரும் சந்தோஷ மேலீட்டால் பரஸ்பரம் முத்தம் கொடுத்துக் கொண்டனர். பிறகு கோமளம் தன் சகோதரியை மேல் மாடிக்கு அழைத்துச் சென்றாள். கோமளம் தன்னுடைய சந்தோஷ ஆரவாரத்தில் வாயிற்படியில் உயரமும் அழகுமுள்ள ஒரு யௌவன புருஷன் நிற்பதைக் கவனிக்கவேயில்லை. ஆயினும் அவன் அச்சகோதரிகளிருவரும் தழுவிக்கொண்டதைக் கண்டு சந்தோஷக் கண்ணீர்வடித்து அவர்களுடன் மாடிக்குச் சென்றான்.

வழியில் கோமளம் தன் சகோதரியிடம், "என தன்புள்ள சகோதரியே! கடைசியில் நீ நமது வீட்டுக்கு வந்து

சேர்ந்ததுபற்றி மிக சந்தோஷம். உன் கடிதம் கிடைத்ததும் நான் அளவிலா சந்தோஷமடைந்தேன். உன்னிடம் தெரிவிக்க ஒரு நல்ல விஷயமும் இருக்கிறது'' என்று சொல்வதற்குள் தங்களுடன் அருகில் ஒரு யௌவன ஆடவன் வருவதைக்கண்டாள். அதை உணர்ந்த கற்பகவல்லி, "என தன்புள்ள கோமளம்! இதோ இந்த ஆடவர்தான் நான் உனக்குக் கடிதத்தில் தெரிவித்த மதுரைநாயகம்பிரபு. இந்த நிமிஷம்வரையில் அவர் உனக்குப் புதியவரென்றாலும் இப்போது நான் உன்னிடம் தெரிவிக்கப்போகும விஷயத்திலிருந்து நீ அவரை ஒரு சகோதரி தன் சகோதரனை வரவேற்கும் முறையில் வரவேற்பாய் என்பதில் சந்தேகமில்லை,'' என்றாள்.

கற்பகவல்லி இவ்வாறு கூறியதைக்கேட்டு ஆச்சர்யமடைந்த கோமளவல்லி, "சகோதரியே! என்ன சொல்கின்றாய். முன்பு அருமைநாதம் பிரபுவைப்பற்றிப் பிரஸ்தாபித்தபோதும் நமது அத்தை ஆச்சர்யமடைந்தாள். இதில் ஏதோ மர்மமிருக்கிறது.'' என்றாள். இதற்குள் கற்பகவல்லி அதி ஆச்சர்யத்துடன், "என்ன? நமது அத்தையா? பேசுகிறாளா?'' என்று வினவினாள்.

கோமளவல்லி:—ஆம்; நான் சொல்வதெல்லாம் மெய்தான். நேற்றிரவு தெய்வாதீனமாய் எதிர்பாராதவகையில் ஆச்சர்யமாக நமது அத்தைக்குப் பேச வந்துவிட்டது. பாரிசநோய் திடீரென்று ஒழிந்தது.

கற்பகவல்லி:—ஆ, அப்படியா? நமது அத்தைக்கு சித்தஸ்வாதீனம் வந்துவிட்டதா? மதுரைநாயகம் பிரபுவே! நான் எப்படி எனக்கு நேர்ந்த விஷயங்களையெல்லாம் என் அத்தையிடம் கூறிக்கொள்வேன்.

கோமளம்:—கற்பகம், கற்பகம்! நீ என்ன கூறுகிறாய்? நீ கூறுவதைப் பார்த்தால் பயமாய் இருக்கிறதே. நீ என்ன குற்றம் செய்திருக்க முடியும்? இல்லை, இல்லை. நீ என்ன தவறு இழைப்பாய்?

இச்சமயத்தில் கோமளத்தின் கூக்குரலைக்கேட்டு மரகதவல்லியும், லீலாவதியும் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். அவர்களில் மரகதவல்லி, திடீரென்று, "ஓ, செல்லப்பப்பிரபுவின் மனைவி மதனவல்லி இங்கே வந்துவிட்டாள்" என்று கதறினாள். அதைக்கேட்ட கோமளவல்லியும், "ஆ! மதனவல்லியா" என்று கூறிக்கொண்டே தன் சகோதரியின் முகத்தைப் பார்த்தவண்ணம், "ஓஹோ! எனக்கெல்லாம் தெரிந்து விட்டது" எனச் சொல்லிய வண்ணம் பூமியில் சித்த ஸ்வாதீனமின்றி சாய்ந்தாள்.

பார்த்தீர்களா? நேயர்களே! தன்சகோதரி கற்பகவல்லி நவீனாகரிகம் நிரம்பிய ரத்தினபுரி போன்ற பெரிய பட்டணங்களிலும் சிறிதும் கெடாமல் பரிசுத்தமாக இருக்கமுடியுமா என்று அஞ்சியதற்கேற்பத் தன் சகோதரியே பெயர் பெற்ற மதனவல்லி என்று தெரிந்ததும் உயிர்போனதுபோல் பரிதபிக்கலானாள். பாவம்! உலகவிவகாரம் அறியாத கோமளத்துக்குக் கேவலம் கற்பகவல்லியின் வாழ்க்கை மிக்க இழிவானதென்று தெரிந்தது. உண்மையிலேயே அத்தகைய வாழ்க்கை இழிவானதே யாதலால்தான் தனக்கு நிகழ்ந்தவைகளை எப்படித் தன் அத்தையிடம் தெரிவிப்பதென்று கற்பகவல்லியும் மனம் வருந்தினாள்.

165 - வது அத்தியாயம்

நேயர்காள்! இங்கே நாம் நமது கதையின் தொடர்ச்சியை விட்டுவிட்டு மற்றொரு பழைய விவரத்தை அறிவிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்போது தான் இப்போது தோன்றியிருக்கிற மர்மங்களெல்லாம் வெளிச்சமாகத் தெரியும். இப்போது நாம் எழுதுகிற காலத்துக்குச் சுமார் இருபத்துநான்கு வருஷங்களுக்குமுன், ரத்தினபுரிக்குச் சிலமைல் தூரத்திலுள்ள ஒரு ஊரில் நான்கு சகோதரிகள் வசித்துவந்தார்கள். அவர்களுக்குப் பெற்றோர்கள் இருக்கவில்லை. ஏதோ ஒரு ஜமீனிலிருந்து அவர்களுக்கு உபாயமாக வருவாய் கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்களின் பெயர் கமலம், மாகதவல்லி, மேனகை, லீலாவதி என்பதாகும். அவர்களில் கமலம் என்னும் மூத்தவள் தான் மற்றவர்களைவிட அழகில் சிறிது குறைந்தவளாயிருந்தாள். ஆனால் அதற்குப் பதிலாக அவளிடம் நல்ல குணங்கள் பதிந்திருந்தன. உயர்ந்த கொள்கைகளும் நற்குணங்களுமே அவளது ஆபரணம். அவளுடைய மூன்று சகோதரிகளான மாகதவல்லி, மேனகை, லீலாவதி ஆகியோர் அழகிற் சிறந்தவர்களாயும், கண்ணைக்கவரும் ரூபலாவண்யமுடையவராயும் இருந்தனர். ஆனால் அவர்களிடம் நற்குணங்களும் ஒழுக்கமும் இருக்கவில்லை. அவர்கள் அவசியமான கல்வி கற்றவர்களாகவும், உயர்தர குடும்பங்களுடன் சகவாசம் செய்யும் பழக்கமுடையவர்களாயும் இருந்தார்கள். இதனால் அவர்களுக்குப் பெரிய இடங்களில் விவாகசம்பந்தமும் ஏற்பட்டிருக்கும். ஆயினும் அவர்கள் அறிவின்மை காரணமாகவும், தங்கள் அழகின் காரணமாகவும் அந்த ஊரி

லுள்ள சில பணக்கார வாலிபர்களுடன் நேர்மையற்ற முறையில் சினேகம் வைத்துக்கொண்டுவிட்டபடியால் ஊரில் அவர்கள் விஷயத்தில் அபவாதம் அதிகரித்தது. மூத்த சகோதரியான கமலத்துக்கு இதர சகோதரிகளின் செய்கை பிடிக்கவில்லை. அவள் எவ்வளவோ புத்திமதிகளைக் கூறினாள். ஆனால் இளங்கன்று பயமறியாது என்பதுபோல் யௌவனத்திலும் அழகிலும் மூழ்கியிருந்த அவர்கள் தங்கள் சகோதரியின் நல்லுபதேசத்தைப் பொருட்படுத்தவில்லை. உலக மக்களின் அபிப்பிராயத்துக்கும் அவர்கள் அஞ்சவில்லை.

இறுதியாக அச்சகோதரிகள் மூவரும் தங்கள் நிலைமையை உணரும்படியான நிலைமை ஏற்பட்டது. அவர்களின் வாலிப நண்பர்கள் அவர்களைவிட்டுப் பிரிந்தார்கள். இதனால் அவர்களுடைய மரியாதையும் போய்விட்டது. பிறகு சில நாட்களில் புத்தியில்லாத அந்த மூன்று சகோதரிகளில் பெரியவர்களான மரகதவல்லி சுமார் இருபதுவயதானவளாயிருந்தபடியால் தன் நிலைமையை உணர்ந்து இனி இவ்வாறு இருக்கலாகாதென்றும், யாரேனும் கண்ணியமான ஒருவரை மணந்துகொண்டு அவருடன் நிரந்தரமாக வாழ்வதென்றும் முடிவுசெய்தாள். அக்காலத்தில் அவ்வூரில் மாரன் என்னும் ஒருவியாபாரி இருந்தான். அவனும் சிறிது அழகுள்ளவனாகவும், செல்வமுடையவனாகவும் இருந்தான். அவனுக்கு மரகதவல்லியிடமும், மரகதவல்லிக்கு அவனிடமும் பரஸ்பரம் அன்பு இருந்தது. ஆகவே அவள் தன் சகோதரிகளையெல்லாம் விட்டு அவனுடன்போய் அவன் ஆதரவில் வசிக்க ஆரம்பித்துவிட்டாள்.

அவள் அவ்வாறு பகிரங்கமாக ஒரு ஆடவனுடன் வசிக்கச் சென்றுவிட்ட விஷயத்தில் நற்குணம் வாய்ந்த கமலத்துக்கு அதிக அவமானமாகவே இருந்தது. ஆயினும் மற்ற

இரு சகோதரிகளும் மாகதவல்லி செய்தது சரியே என்று ஆமோதித்தார்கள். எனினும் கமலம் அவர்களுடைய எண்ணத்துக்காக அவர்களைக் கண்டித்து இத்தகைய தீய சிந்தனைகள் இருக்குமானல் அவர்கள் விரைவில் அழிவது நிச்சயமென்றும் எச்சரிக்கை செய்தாள். அவள் அவர்களுக்கும் நற்புத்தி கூறுவதை நிறுத்தவில்லை. தன்னுலியன்றவரை சொல்லிக்கொண் டிருந்தாள்.

மாகதவல்லி மாரனுடன் வசிக்கச்சென்ற சில தினங்களுக்குப் பிறகு அதே ஊருக்கு பச்சையப்பபிள்ளை என்று ஒருவர் வந்தார். அவர் அழகிற் சிறந்தவர். பெரிய பணக்காரர் என்றும் தெரிந்தது. அவர் தனிவீடு வாங்கிக்கொண்டு தன் சேவகர்களுடன் வசித்து வந்தார். சதா சர்வகாலமும் குதிரைமீதேறி அவ்வூர் முழுவதும் சுற்றித் திரிவதுதான் அவர் வேலை. இவ்வாறு அவர் தனியாகச் சுற்றிக்கொண் டிருந்தபோது அவ்வூரில் வசித்த நான்கு சகோதரிகளில் ஒருத்தியான மேனகையைக் கண்டு மோகித்தார். அவர் மெதுவாகத் தன் மோகத்தை அவளிடம் தெரிவித்தார். அவளும் அவ்வளவு அழகுடைய ஒரு புருஷன் தன்னை நேசிக்கிறுன் என்பதையறிந்ததும் மிகவும் சந்தோஷமடைந்து அவரிஷ்டப்படி நடந்துகொள்வதாக அவரிடம் தெரிவித்து விட்டாள். அவரும், அவள் யார், அவள் குடும்பத்தின் நிலைமை என்ன என்பதை விசாரியாமலும், அவளுடைய சகோதரி ஒருத்தி ஒரு ஆடவனுடன் ஓடிப்போனுள் என்பதைக் கவனியாமலும் மேனகையை விவாகம் செய்து கொள்வதாக வாக்களித்தார்.

இவ்வாறு இவர்கள் இருவரும் தங்கள் நேசத்தை நாளடைவில் அதிகப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தினசரி மாலை நேரங்களில் தனியான இடத்தில் சந்தித்துக்

கூடிக்குலவி மகிழ்ந்துவந்தார்கள். அவர் அவ்வூரில் வேறு யாருடனும் அதிகம் கலந்து பேசாமையால் அச்சகோதரி களைப்பற்றி யாரும் ஒன்றும் அவரிடம்கூற எதுவில்லாமற் போய்விட்டது. அவரும் இவ்விஷயத்தை இரகசியமாகவே வைத்துக்கொண்டார். மேனகையும் அழகிற் சிறந்தவளாயும், யௌவனம் வாய்ந்தவளாயும் இருந்தபடியால் தன் முழு சாமர்த்தியத்தையும் சாகசத்தையும் பிரயோகித்து அவர் மனதை அப்படியே வசீகரித்துவிட்டாள். தான் மகா பரி சுத்தமானவளென்றும், அந்தப் பச்சையப்ப பிள்ளையைத் தவிர வேறு புருஷனைக் கண்ணெடுத்தும் பார்த்ததில்லையென் றும், அவருக்காகத் தன் உயிரையும் தியாகம்செய்யத் தயா ராய் இருப்பதாகவும், மற்றும் பலவிதமாகவும் அவள் அவ ரிடம்கூறி அவரை மயக்கலானாள். அவரும் நாளுக்குநாள் அவளிடம் தனியாக் காதல்கொள்ள ஆரம்பித்ததுடன் எப் படியாவது அவளைத் தன் ஆயுள்முழுதும் காப்பாற்றுவதென் றும் தீர்மானித்தார். தான் ஏதோ ஒரு வழக்கில் அகப்பட் டுக்கொண்டதாகவும், தலைமறைந்து வாழும் பொருட்டு அப் பெயருடன் அங்கு வந்ததாகவும், இப்போது அந்த வழக்குத் தனக்குச் சாதகமாக முடிந்துவிட்டபடியால் இனி தான் ரத்னபுரிக்குச் செல்லலாமென்றும், ஆயினும் விவாகத்தை மட்டும் இரகசியமாகவே செய்துகொள்ள முடியுமென்றும் அவர் அவளிடம் தெரிவித்தார்.

மேனகையும் இதையெல்லாம் தன் இரு சகோதரிக ளிடம் தெரிவித்தாள். மூத்தவளாகிய கமலம்மட்டும் அதைச் சரிவர நம்பவில்லை. இரகசியமாக விவாகம் செய்துகொள்வ தென்னும் யோசனையை அவள் அங்கீகரிக்கவில்லை. எதை யும் நன்றாக விசாரிக்கவேண்டும் என்று கூறினாள். கடைசி சகோதரியாகிய லீலாவதிமட்டும் எல்லாம் உண்மையாகவே

இருக்குமென்று நம்பி எப்படியாவது அப்பணக்காரனை மணப்பதே சரி என்றும் கூறினள். மேனகை ஒருநாள் தன் காதலனையே வீட்டுக்கு அழைத்து வந்தபோது அவர் கமலத்தினிடமும் தன் நிலைமையையும் எண்ணங்களையும் பூராவாக வெளியிட்டார். அதன்மீது கமலமும் ஒருவாறு ஒப்புக்கொண்டு விட்டாள். எப்படியாவது ஒரு புரோகிதரை அழைத்துவந்து அதே வீட்டில் இரகசியமாக விவாகம் முடித்துவிடுவதென முடிவு செய்யப்பட்டது; அப்படியே குறிப்பிட்ட வேளையில் பச்சையப்ப பிள்ளையும் புரோகிதருடனும் விவாகத்துக்கு வேண்டிய சாமான்களுடனும் அங்கே வந்து சேர்ந்தார். கலியாணமும் சம்பிரமமாகவே முடிந்துவிட்டது. மேனகையை அவளுடைய சகோதரிகள் வாழ்த்தினர். கன்னிகையாயிருந்த மேனகை, பச்சையப்ப பிள்ளையின் மனைவியானுள். வீட்டாருக்குள்ளேயே பலமான விருந்தும் நடைபெற்றது. ஒன்றிரண்டு தினங்களுக்குப் பின்னர் பச்சையப்பபிள்ளை தனது காதலியாகிய மேனகையை இரத்தினபுரிக்கு அழைத்துச் சென்றார்.

இரத்தினபுரிக்கு வந்ததும் பச்சையப்பபிள்ளை மேனகையைத் தனியே ஒரு வீட்டில் வைத்து அவளுக்கு வேண்டிய எல்லாவித சௌகரியங்களையும் ஏற்படுத்திக்கொடுத்தார். அவளே அவ்வீட்டுக்கு எஜமானியாக இருந்தாள். ஆனல் அவர் ஏன் அவளைத் தன் சொந்த வீட்டிலேயே சேர்க்கவில்லை என்னும் சந்தேகம் மட்டும் மேனகைக்கு அதிகமாயிருந்தது. பச்சையப்ப பிள்ளையும் உண்மையை மறைக்காமல் அவளிடம் தன் நிலைமையைத் தெரிவித்தார். இந்த விவாகத்தைப்பற்றி அறிந்தால் தன் வயதான தந்தை தனக்கு ஒருபைசாவும் ஆஸ்தி தரமாட்டாரென்றும், சிறிது தாமதித்தால் நிறைய ஆஸ்தி வருமென்றும்,

ஆதலின் மேனகையும் பொறுத்துக்கொண்டிருந்தால் பின்னால் சுகப்படலாமென்றும், இந்த இரகசியத்தை அவள் வெளியிடலாகாதென்றும் தெரிவித்தார். அவளும் தனக்கு அவரிடமிருந்த அன்பின் காரணமாக அவ்வாறே பொறுமையுடன் நடந்துகொள்வதாகத் தெரிவித்தாள். ஆயினும் பச்சையப்பப்பிள்ளை ஒருநாளாவது மேனகையின் வீட்டுக்கு வரத் தவறியதில்லை. இராக்காலங்களில் விசேஷமாக வரவில்லையென்றாலும் பகலில் தினசரிவந்து ஐந்தாறுமணி நேரமாவது அவளுடன் கழித்துவந்தார். அவளுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் தேடிக்கொடுத்தார். இவ்வாறு சிலமாதம் கழிந்ததும் மேனகை கர்ப்பவதியாகி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அதற்குக் கற்பகவல்லியென்று பெயரிடப்பட்டது. பச்சையப்பப்பிள்ளை வராத நேரங்களிலெல்லாம் அவள் தன் அழகிய குழந்தையைப் பராமரிப்பதில் கவனம்செலுத்திக் காலங்கழித்து வந்தாள்.

இப்போது நாம் மேனகையைவிட்டு இதர சகோதரிகளின் நிலைமை என்ன என்பதுபற்றிக் கவனிப்போம். நான்கு சகோதரிகளில் மூத்தவளான கமலமும், கடைசி சகோதரியான லீலாவதியும் தான் ஒன்றாக இருக்கிறார்கள். மரகதவல்லி மாறன் என்பவனுடன் வசிக்க ஓடிவிட்டாள். மேனகையோ பச்சையப்பப்பிள்ளை என்பவரை மணந்துகொண்டு இரத்தினபுரிக்கு ஓடி விட்டாள். லீலாவதி மற்ற சகோதரிகளைவிட அழகிற்சிறந்தவள். மிக ரூபலாவண்யமுள்ளவள். அவளுக்கு யுக்தவயது வந்துவிட்டது. இதர சகோதரிகளின் நடத்தையையும் கவனித்திருக்கிறாள். ஆகவே அவளும் அவ்வூரில் இருந்த யௌவனபுருஷன் ஒருவன்மீது மோகங்கொண்டாள். அவனும் லீலாவதியைக் காதலித்தான். அவன் மடத்துக்குத் தலைவனாகப் போகவேண்டியவனாயிருந்ததால்

அவன் பெண் சம்பந்தம் இல்லாதவனாக இருக்கவேண்டியிருந்தது. அப்படியும் அவன் நல்ல யௌவனம் வாய்ந்தவனும், சௌகரியமான அளவு செல்வமுடையவனாகவும், நாகரிக உலகில் காலங்கழிப்பவனும் இருந்தபடியால் அவன் பிரம்மசாரியாக இருக்கமுடியவில்லை. ஆகவே அவன் எப்படியோ லீலாவைச் சந்தித்து அவளைக் காதலித்துவிட்டான். அவளும் மற்ற சகோதரிகளைவிட கமலத்தினிடம் அதிக பய பக்தி விசுவாசமுள்ளவளாக இருந்ததால் எக்காரியத்தையும் அவளைக் கேட்காமல் செய்ய அஞ்சினாள். லீலாவே கடைசி சகோதரியாக இருந்ததால் கமலமும் அவளிடம் தாய்போல் அன்புகொண்டு அவளைப் பாராமரித்து வந்தபடியால் அவள் எத்தகைய தவறானவழியிலும் செல்லாதபடி பார்த்துக் கொள்வதில் மிக ஜாக்கிரதையாயிருந்தாள்.

ஆயினுமென்ன? "கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் யாது பயனுமில" என்பதுபோல காதலர் இருவர் கண்ணும் பரஸ்பரம் பார்த்து ஒப்புக்கொண்டு விடுமாயின் பிறகு அதைத் தடுக்க யாரால்முடியும்? லீலாவதி மிக ரகசியமாகத் தன் காதலனுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டுவிட்டாள். அவனும் அவளை விவாகம் செய்து கொள்வதாக வாக்களித்ததன்மீது அதை நம்பித் தன் மானத்தை அவனிடம் ஒப்படைத்துவிட்டாள். ஆனால் அவன் விவாகம் செய்துகொள்வதில் காலதாமதம் செய்து கொண்டேவந்தான். கேட்டபோதெல்லாம் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லித் தான் இன்னும் பல நண்பர்களை நம்பி இருப்பதாகவும், இப்போது கலியாணம் செய்துகொண்டால் ஏழ்மைத்தனத்திலேயே இறந்துவிட நேரிடுமென்றும், சிறிது பொறுத்தால் பின்னர் சுகப்படலாமென்றும் பல காரணங்களைச் சொல்லி விவாகம் செய்துகொள்ளாமலே தாமதித்து

வந்தான். விவாகமில்லை என்று அவர்கள் சும்மா இருக்கவில்லை. இரகசியமாகச் சந்தித்தபோதெல்லாம் தங்கள் காதலை யடக்கமுடியாமல் மண வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே வந்ததால் சொற்ப தினங்களில் லீலாவதி கர்ப்பவதியாய்விட்டாள். ஆகவே உடனே கலியாணம் செய்துகொண்டு தன் மானத்தைக் காப்பாற்றும்படி அவள் அதிகம் பணிந்து கேட்டுக்கொண்டாள். அப்போதும் அத்திருட்டுக் காதலன் ஏதோ நொண்டிச் சமாதானங்களைச் சொன்னானே யொழிய அவளுடைய நெருக்கடியான நிலைமையை உணரவில்லை. எனவே அவள் பாடு திண்டாட்டமாய்விட்டது.

லீலாவதி தன் விஷயத்தை மிக இரகசியமாய் வைத்துக் கொண்டிருந்தாள் என்றாலும் அவளுடைய மூத்த சகோதரியாகிய கமலத்துக்கு மட்டும் ஏதோ சந்தேகம் தோன்றி விட்டது. ஆகவே அவள் ஒருநாள் லீலாவை மிக அழுத்தமாகக் கண்டித்து உண்மையைக் கூறும்படி கேட்டாள். அப்போதும் லீலாவதி உண்மையைக் கூறப் பயப்பட்டுக் கொண்டு ஏதேதோ பேசி சமாதானம்செய்ய முயன்றாள். ஆனால் கமலம் அதையெல்லாம் கேட்காமல் அவளுடைய நடத்தையைப்பற்றிப் பலமாகக் கண்டித்து இனி அவள் வாழ்க்கையே பாழாய்ப் போய்விடுமென்றும், அக்குடும்பத்துக்கே கெட்டபெயர் வந்துவிட்டதென்றும் எச்சரிக்கை செய்தாள். கமலம் பொறாமையினால் ஒன்றும் கூறவில்லை. தன் சகோதரிகளெல்லாம் இவ்வாறு கெட்டு அழிந்துவிடுகிறார்களே என்னும் கவலையினால்தான் இவ்வாறு அனைவருக்கும் எச்சரிக்கை செய்தாள். கமலம் தன்னைக் கண்டித்த மறுநாள் லீலாவதி தன் கள்ளக்காதலனாகிய அந்த யௌவன புருஷனைச் சந்தித்தபோது தன்னுடைய நிலைமையைப்பற்றி யெல்லாம் விவரமாகக் கூறிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

இதனால் அவனுக்கும் அப்போதுதான் சிறிது அச்சம் தோன்றியது. ஆனால் இனி என்னசெய்வதென்று தோன்றவில்லை. தன் யௌவன பிராயத்தின் கொடுமையால் முன்பின் யோசனையில்லாமலும் தன்னிடம் ஏமாந்த ஒரு பெண்ணைக் கெடுத்துவிட்டான். இப்போதோ அவள் கர்ப்பவதியும் ஆகித் தன் மானத்தைக் காப்பாற்றும்படி கெஞ்சிக்கேட்கிறாள். அவனுக்கோ அவளை விவாகம் செய்துகொள்ளக் கூடிய யோக்கியதை இல்லை. கடைசியில் அவள் தன்னை விவாகம் செய்துகொள்ளாவிட்டாலும் எங்கேயாவது கண் மறைவாக வெளியூருக்கு அழைத்துக்கொண்டு போய்விடும் படியும், இனி தன் சகோதரியின் பாதுகாப்பில் ஒரு நிமிஷமும் இருக்கமுடியாதென்றும் கூறிக்கொண்டு அவனது கால்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சிக்கேட்டாள்.

ஐயோ, பெண்பாவம் பொல்லாதல்லவா? தான் செய்த குற்றத்தை உணர்ந்தான். தான் மனமாரக் காதலித்து இரகசியமாக இஷ்டப்படியெல்லாம் இன்பத்தை அனுபவித்துவிட்டு இப்போது அப்பெண் தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கேட்கும்போது உதறித் தள்ளிவிட்டுப் போய்விட மனந்துணியுமா? பார்த்தான். சரி, அவள் கேட்டுக்கொள்வதுபோல எங்கேனும் அழைத்துக் கொண்டு போய் இரகசியமாய் வைப்பதுதான் நலமென்று முடிவு செய்தான். அப்படியே லீலாவதி அவனுடன் அவ்வூரை விட்டு வெளியேறிவிட்டாள். இதனால் மூத்தச் சகோதரியாகிய கமலம்மட்டும் தனியே நிற்கவேண்டியதாயிற்று. அவளும் லீலாவதியுடன் போய்விட்டிருப்பாள். ஆனால் அவள் எங்கே யாருடன் போனாள் என்பது அவளுக்குத் தெரியாது. என்செய்வாள் பாவம்! உடனே இரத்தினபுரிக்குச்சென்று இந்த துக்ககரமான விஷயத்தை மேனகையிடம் தெரிவித்

தாள். அவளும் அதற்காக வருந்தினள். பிறகு கமலம் மாகதவல்லி மாறன் என்பவருடன் எங்கே வசிக்கிருள் என்பதை விசாரித்ததில் இரத்னபுரிக்கடுத்த இராமாபுரியில் இருக்கிருள் என்பதை அறிந்து அங்கே சென்று அவளிடமும் லீலாவதியின் கதியைப்பற்றித் தெரிவித்தாள். ஆனல் மாகதவல்லி அதற்காகக் கவலைப்படாமல், லீலாவதி தன் எதிர்கால சுகத்தைக்கோரியே தக்கபடி தான் நடந்துகொண்டிருப்பாள் என்று கூறிவிட்டாள். இதனல் உத்தமகுணங்களில் சிறந்த கமலத்தின் மனம் உடைந்தது. ஆகவே அவள் மீண்டும் தன் பழைய :இடத்துக்குவந்து தனியாகத் துக்கக் கடலில் மூழ்கித் தன் வாழ்க்கையை ஒருவாறு ஆடம்பரமின்றி நடத்தி வந்தாள்.

லீலாவதியோ தன் கள்ளக்காதலனுடன் போய்விட்டாள். அவன் தன் பெற்ருேர்களிடமிருந்து தன் செலவுக்கு அவசியமான தொகையைப் பிரதிமாதமும் பெற்று வந்தான். அப்போது காதலர் இருவருமே வயதில் மிகச் சிறுவர்களாய் இருந்தார்கள். யாருக்குமே இருபத்தொரு வயதுக்குமேல் ஆகி யிருக்கவில்லை. அவன் தன் பெற்ருேர்களிடமிருந்து பெற்ற பணத்தையெல்லாம் வரைதுறையின்றி மனம்போனபடியெல்லாம் செலவு செய்தான். லீலாவதியை அழைத்துக்கொண்டு இன்று ஒரு நகரம், நாளை ஒரு நகரமாகச் சொற்பகாலம் அலைந்து திரிந்தான். இதற்குள் லீலாவிடம் அவனுக்கிருந்த அன்பு குன்றத் தலைப்பட்டது. ஆகவே அவள் அவனுக்கு ஒரு பளுவாகத்தோன்ற ஆரம்பித்தது. எனினும் அவர்கள் இருவரும் ஊர் ஊராகத் திரிந்துகொண் டிருந்தபோது லீலாவதி ஓர் ஆண்குழந்தையைப் பெற்ருள். அக்குழந்தையைப்பெற்ற ஐந்தாறு தினங்களுக்குள் அக் கள்ளக்காதலன் அக்குழந்தையைக்

கொன்றுவிட வேண்டுமென்று அவளிடம் யோசனை கூறி னான். ஏனெனின் அக்குழந்தை அவர்களுக்கு ஒரு பெரிய பளுவாகத் தோன்றியதேயொழிய இன்பமாகத் தோன்ற வில்லை. ஆனல் பெற்றமனம் பித்து அல்லவா? லீலாவதிக்கு அச்சொற்களைக் கேட்கும்போதே காதில் நாராசம் காய்ச்சி ஊற்றியதுபோல இருந்தது. அவ்வாறு செய்ய முடியா தென்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். பார்த்தான் கள்ளக் கற்தலன். அவனுக்கென்ன? ஏதோ வாலிபத்தில் அப் பெண்ணைக்கண்டு மோகித்தான். தன் காரியத்தைச் சாதித் துக்கொண்டான். அவ்வளவுதான் அவளிடம் உண்மை யான காதல் ஏற்பட்டிருந்தால் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றி யிருப்பான். உண்மைக்காதல் எது! இவ் வாறுதான் எத்தனையோ பெண்கள் வாலிபசேஷ்டை காரண மாகக் கண்மூடித்தனமாய்க் கண்ட ஆடவர்களுடன் வெளி யேறி விடுகின்றனர். பின்னல் அவர்கள் படும் அவதியைக் கண்டு இறைவன் தான் மனம் பொறுக்கவேண்டும். இதற் காகத்தான் நமது பெரியோர்கள் உண்மையில் ஒரு ஆட வனும் ஒருமாதும் காதலித்தாலும் பலர் அறிய தெய்வ சாட்சியாக மணச்சடங்கைச் செய்துகொண்டு ஒரு கட்டுப் பாடான வாழ்க்கைக்குள் அடங்கவேண்டுமென்று விதி வகுத்தனர். அவ் விதியையும் மீறப் பலர் இப்போது ஆசைப்படுகின்றனர். காலம் எப்படி செல்லுமோ பார்ப் போம்.

லீலாவதியையும் அவள் குழந்தையையும் அப்படுபாவி விட்டு விட்டு எங்கேயோ தலை மறைந்து விட்டான். லீலா வதி யிடமோ பைசாவும் கிடையாது. ஆள் துணையுமில்லை. எங்கோ வந்த இடத்தில் இவ்வாறு திக்கின்றி விட்டுவிட்டுப் போனல் அவள் என் செய்வாள் பாவம்! அவளுடைய

மனோவேதனையை இறைவன்தான் அறியவேண்டும். தான் இவ்வாறு தீர்க்காலோசனை இன்றியும், தன் மூத்த சகோதரியின் வார்த்தையைக் கேளாமலும் புத்தியில்லாத்தனமாய் நடந்து கொண்டதற்காக வருந்திக் கண்ணீர் வடித்தாள். அவளுக்கு சித்த ஸ்வாதீனமில்லாமல் போய்விட்டது. தான் என்னசெய்கிறாள் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. இந்த நிலைமையில் தனக்குத் தன் கள்ளக்காதலனால் கூறப்பட்ட யோசனை அவளது கெட்டுப்போன மூளையில் பட்டது. ஆகவே அவள் அந்த யோசனையை அவள் முன்பு ஆதரிக்காமல் இருந்தும் இப்போது சித்த ஸ்வாதீனமற்ற நிலைமையில் அவளுக்கும் தெரியாமலே அவள் அவ்வேலையைச் செய்து விட்டாள். எப்படியோ அக்குழந்தை, தான் மனமாரக் கட்டித்தழுவிய காதலன் மூலம் பிறந்த குழந்தையின்மீது தன் கொடிய கைகளைப்போட்டு அதைக் கொன்று விட்டாள். குழந்தையின் உயிர் போகும் வரையில் தான் செய்யும் காரியம் இன்னதென அவளுக்குத் தெரியவில்லை. குழந்தை இறந்ததும் அவளது மூளையில் ஒருவித வெளிச்சம் தோன்றியது. தான் செய்த மிகக்கொடிய வேலைக்காக வருந்தினாள்.

அதுமட்டுமா? அரசாங்கம் சும்மா இருக்குமா? அவள் பெற்ற குழந்தையேயானாலும் அக்குழந்தையைக் கொல்ல அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது? அக்குழந்தையும் சர்க்காரின் பிரஜையாதலின் அதைப் பாதுகாக்கவேண்டியதும் சர்க்காரின் கடமைதானே. உடனே போலீசார் அவளைக் கைதுசெய்துவிட்டார்கள். சிசுஹத்தி குற்றம் அவள் மீது சாட்டப்பட்டு வழக்கு நடந்தது. அவ்வழக்கு விவரம் பத்திரிகைகளில் வெளியாயிற்றென்றாலும் அவளுடைய காதலன் மாறுபெயருடன் இருந்தபடியால் வழக்கில் சம்பந்தப்

பட்டவர்கள் யாரென அறியப் பலராலும் முடியவில்லை. வழக்கில் ஜூரிகளாய் இருந்தவர்கள் அப்பெண்ணின்மீது கிருபை கூர்ந்து அக்குற்றம் அவளுடையதல்லவென்றும், அப்படு பாவி அவளை ஏமாற்றிக்கெடுத்ததே இவ்வளவுக்கும் காரணமென்றும் சொன்னார்கள் அந்த ஆள் அகப்படவில்லை. ஆதலின் இறுதியில் லீலாவதியை எத்தகைய தண்டனையுமின்றி விடுதலை செய்துவிட்டார்கள். ஆனால் கொலைகாரி என்னும் அபகீர்த்தியுடன் தான் அவள் வெளியில் வரவேண்டியதாயிற்று.

இவ்வழக்கு விவரங்களையெல்லாம் கமலம் பத்திரிகைகளில் படித்தபோது தன் சகோதரியின் விஷயமே எனத் தெரிந்துகொண்டு மிக மனம்வருந்தினாள். எனினும் ஒருவாறு தைரியம் செய்துகொண்டு அவ்வழக்கு எந்த ஊரில் நடந்ததோ அந்த ஊருக்குச்சென்று தன் சகோதரியைப்பற்றி விசாரித்தாள். ஆனால் அங்குசென்று விசாரித்ததில் லீலாவதி விடுதலை யடைந்ததும் அவ்வூரைவிட்டு எங்கேயோ போய் விட்டதாகத் தெரிந்துகொண்டாள். ஆகவே அவளுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. அவள் மீண்டும் திரும்பித் தன் வீட்டுக்கு வந்து தனியே வசிக்கலானாள். அவள் தனியாக வசிக்கும்போது தன் சகோதரிகளின் நிலைமையும் தன் நிலைமையுமே அவளது ஞாபகத்துக்கு வந்து அவள் துக்கம் அதிகரிக்கும். மேலும் துக்கம்வந்தால் மேலும் மேலும் வரும் என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர் அல்லவா? அதுபோல் கமலத்துக்குக் கஷ்டம் அதிகரிக்கலாயிற்று. அச்சகோதரிகள் ஆரம்பத்திலிருந்தே ஏதோ கம்பெனியிலிருந்து சிறிது பணவுதவி பெற்றுவந்தார்கள் என்று சொன்னேமல்லவா? அந்தக்கம்பெனி துரதிருஷ்டவசமாக முறிந்துவிட்டது. அதனால் கமலத்துக்கு வரவேண்டிய வருவாய் நின்று

விட்டது. ஆகவே ஜீவனத்துக்கே வழியில்லாமல் போய்விட்டது. மற்ற சகோதரிகள் எப்படிக் கெட்டுப்போனாலும் தான் மட்டுமாவது இறைவனை நம்பித் தனக்குக் கிடைக்கும் சொற்ப வருவாயைக் கொண்டேனும் பரிசுத்தமாக வாழ்ந்து வரலாமென்று நினைத்தாள். அந்த நினைப்பின் வாயிலும் மண் விழுந்துவிட்டது. அவள் மற்ற சகோதரிகளைப்போல் அழகுள்ளவளாய் இல்லாமலிருந்ததாலும், வயதும் ஆகிவிட்டதாலும் அவளை எந்தப்புருஷனும் மோகிக்கவில்லை. அப்படி ஏதேனும் ஆடவர் மோகிப்பதாகவே வைத்துக்கொண்டாலும் அவள் உத்தமகுணங்களுடையவளாதலால் அதற்கெல்லாம் எளிதில் இணங்கி விடுபவளல்ல.

எனவே அவள் என்னசெய்வதென்று தோன்றாமல் இறுதியாகத் தன் சகோதரிகளில் கூடியவரையில் நல்லவளாகவும், நல்ல நிலைமையில் இருப்பவளாகவும் இருக்கிற மேனகையிடம் சென்று லீலாவதிக்கு நேர்ந்த கஷ்டங்களையும், தனக்கு ஏற்பட்டுள்ள துயரங்களையும் விவரமாகக் கூறிக்கொண்டாள். அப்போது மேனகை இரண்டாவது முறை கர்ப்பமாகிப் பிரசவிக்கும் சமயத்தில் இருந்தாள். ஆகவே கமலம் துக்கத்தை அதிகப்படுத்தாமல் அங்கேயே தங்கியிருந்து மேனகைக்கு ஆறுதல் கூறிக்கொண்டும், அவளுக்கு வேண்டிய சிஷ்ருஷைகளைச் செய்துகொண்டுமிருந்தாள். சொற்ப தினங்களுக்குள் இரண்டாவது பெண் குழந்தை பிறந்தது. அதற்குக் கோமளவல்லி என்று பெயர் வைத்தார்கள். மேனகை பிரசவித்து இரண்டொரு மாதங்களுக்குள் ஒரு திடுக்கிடும்படியான சம்பவம் நேரிட்டது. அதாவது மேனகையையும் அவளது குழந்தையையும் கவனிப்பதற்காக அவள் வீட்டுக்கு வந்துகொண்டிருந்த தாதி ரத்னபுரியின் மேற்குப்பாகமாகிய அப்பிரதேசத்தில் அதிக செல

வாக்குடையவளாய் இருந்தாள். அவள் பல பணக்காரர் வீட்டுக்கும் செல்வதுண்டு. இச்சம்பவம் நடக்கும் இரண்டு வருஷங்களுக்குமுன் அங்கு அருமைநாதம்பிரபு என்பவரின் மனைவி ஒரு ஆண்மகவைப் பிரசவித்ததால் அவ்வீட்டுக்குச் சென்று கவனித்திருந்தாள். ஆகையால் அவள் அருமைநாதம்பிரபுவை நன்ருக அறிந்திருந்தாள். ஆனல் இந்தத் தாதி அவர் வீட்டுக்குவந்து இரண்டு வருஷங்களாகிவிட்டதால் அவருக்கு அடையாளம் தெரியவில்லை. ஒருநாள் தாதி மேனகையைக் கவனிக்க வந்தபோது பச்சையப்பபிள்ளையும் அங்கே வந்தார். அவரைக் கண்டதும் தாதி அவர்தான் அருமைநாதம்பிரபு என்று தெரிந்துகொண்டாள். அவர்மட்டும் அவளைக் கவனிக்கவில்லை. இந்த இரகசியத்தை தாதி உடனே வெளியிடாமல் சொற்பகாலம் தாமதித்தாள். ஆனல் அவள் அவ்வளவு நல்ல குணங்களுடையவள் அல்ல. ஆகவே இரண்டொரு தினங்களில் அவள் தான் கண்ட விஷயத்தை மேனகையிடம் தெரிவித்துவிட்டாள்.

இச்சங்கதியைக் கேட்டமாத்திரத்தில் மேனகை பேரிடி விழுந்தவள்போல் மூர்ச்சையானுள். அவள் மனம் புண் பட்டது. தான் காதலித்த ஒருவர் தன்னை விவாகம் செய்து கொண்டதாச் சொல்லி ஏமாற்றிவிட்டாரே என்று மனம் நொந்தாள். தேகத்தில் ஏற்படும் காயங்கள் ஆறினலும் ஆறும். மனப்புண் எக்காலும் ஆருதல்லவா? மேலும் மனோ வியாதி முற்றிவிட்டால் அதற்குப் பரிகாரமே கிடையாது. எனினும் மூத்தவளான கமலம் தன் சகோதரிக்கு எவ் வளவோ ஆறுதலைக் கூறிவந்தாள். இது நடந்த மறுநாள் பச்சையப்பபிள்ளை வழக்கப்படி மேனகையின் வீட்டுக்கு வந்தபோது மேனகை ஓவென்று அழுதுகொண்டு தான் தாதியின் மூலம் கேள்விப்பட்ட விஷயங்களைக் கூறி

ளுள். பச்சையப்பபிள்ளை உண்மையில் பெரிய மனிதர். மேனகையிடம் அளவிலா அன்பு கொண்டவர். உண்மை பேசுபவர். ஆகவே அவர் அதை மறுக்க முடியாமல் ஒப்புக்கொண்டு தான் செய்த குற்றங்களையெல்லாம் ஏற்றுக் கொண்டு மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார். தனக்கு அவளிடம் ஏற்பட்ட பூரண காதலின் காரணமாகவே இவ்வாறு செய்ததாகவும், தான் ஏதோ வழக்கில் அகப்பட்டுக் கொண்டு மேனகை தங்கி யிருந்த ஊருக்கு வந்தபோதே தனக்கு விவாகமா யிருந்ததென்றும், ஆயினும் தனக்கு அவளிடம் ஏற்பட்ட காதலின் காரணமாக அவளை மறுவிவாகம் செய்து கொண்டதாயும் ஏதோ புரோகிதருக்கு லஞ்சம் கொடுத்து அழைத்து வந்து சட்ட சம்மதமற்ற விவாகம் செய்து கொண்டதாயும், எனினும் தான் அவளுக்கு எவ்வகையிலும் ஏமாற்ற வில்லையென்றும், அவளுக்கும் அவளுக்குத் தன் மூலம் பிறந்த குழந்தைகளுக்கும் ஜீவனத்துக்கு வேண்டியதைத் தான் என்றென்றும் தருவதாகவும், பழையபடியே தினசரி அவள் வீட்டுக்கு வந்துபோய் அவளுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுப்பதாகவும், அவள் சிறிதும் மன வருத்தப்படாமல் தான் இழைத்துவிட்ட குற்றத்துக்காகத் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மேனகைக்கும் அவரிடம் அளவிலா அன்பும் உண்மை விசுவாசமும் இருந்தபடியாலும், அவர் தன்னிடம் உண்மை அன்பைச் செலுத்துவதைத் தான் பிரத்தியட்சமாகப் பார்ப்பதாலும் அவர்மீது வருத்தப்படுவதில் பயனில்லையென நினைத்து அவரை மன்னித்து விட்டாள். இவ்விஷயத்தில் கமலமும் ஒருவாறு ஆறுதலடைந்தாள். எனினும் மேனகையின் மனோவியாதி மட்டும் தீர்ந்தபாடில்லை. பல சௌகரியங்கள் இருந்தும் கூட பிரசவித்த சொற்பகாலத்துக்குள் அதாவது பச்சை உடம்

பில் மனைவியாகி ஏற்பட்டு விட்டபடியால் அது கிராமலே யிருந்து சொற்பகாலத்துக்குள் மேனகை ஐயோ பாவம் அம் மனைவியாதிக்கு இரையானுள். பச்சையப்பபிள்ளை என்கிற அருமைநாதம் பிரபுவும் எவ்வளவோ பணம் செலவுசெய்து நல்ல டாக்டர்களிடம் சிகிச்சை செய்வித்தும் அவருடைய காதலி எமனுலகம் போய்ச்சேர்ந்தாள். மனமுடைந்து போனதே அவள் மரணத்திற்குக் காரணம்.

மேனகையின் மரணச் சடங்குகளெல்லாம் முடிந்த பின்னர் ஒருநாள் கமலம் அருமைநாதம் பிரபுவினுடன் தன் சகோதரியின் மக்களின் எதிர்கால வாழ்வைப்பற்றிக் கலந் தாலோசித்தாள். அருமைநாதம் பிரபுவும் உண்மையில் அம்மக்களைத் தன் சொந்த மக்களாகவே பாவித்து நேசித்த படியால் அவர்களுக்கு ஜீவனத்துக்கு வேண்டிய ஏற்பாடு களைச்செய்ய அவர் சிறிதும் பின் வாங்கவில்லை. கமலம் என்ன யோசனை கூறுகிறுளோ அதன்படியே செய்வதாக அவரும் வாக்களித்தார். அப் பெண்களிருவரும் பெரி யவர்களாகி அவர்களுக்குக் கலியாணம் ஆகும் வரையில் அருமைநாதம்பிரபு வருஷத்துக்கு 120 - பவுன் வீதம் கொடுத்து வந்தால்தான் அவர்களிருவரையும் ஒழுங்கான முறையில் காப்பாற்றுவதாகத் தெரிவித்தாள். இந்த யோச னைக்கு அருமைநாதம்பிரபு சம்மதித்தாரென்றாலும் அவர் களுக்குப் பணம் கொடுப்பது தன் சொந்த மனைவிக்குத் தெரி யக்கூடாதாகையால் பச்சையப்பபிள்ளை என்னும் பேரிலேயே பாங்கியில் பணம் கட்டி வருஷாவருஷம் அக் கையெழுத் திட்டு செக் அனுப்புவதாகவும் அதைக்கொண்டு அவர்கள் பணம்பெற்று சுகமாக வாழ்ந்து வரலாமென்றும் தெரிவித் தார். கமலமும் தடையொன்றும் கூருமல் இந்த யோச னைக்கு இணங்கினுள். ஆனுல் அப்பெண்கள் பெரியவர்க

ளாகும்போது அவர்களுடைய பிறவியைப்பற்றிய உண்மையை அறிந்தால் அவமானப்படுவார்களாதலால் அவர்களுடைய வாழ்க்கையை யேமாற்றிவிட வேண்டுமென்று கருதினாள். மேனகை, அவளுடைய சகோதரிகள் ஆகியோரின் நடத்தையும் சரிதையும் அப்பெண்களுக்குப் பின்னர் தெரிந்தால் அதுவும் நன்றுயிராதாதலால் அந்த சரித்திரத்தையே மறைத்துவிட விரும்பினாள். ஆகையால் கமலம் தன் பெயரையும் சுந்தரம்மாள் என்று மாற்றி வைத்துக் கொண்டு ரத்னபுரியைவிட்டு அதற்குச் சமீபத்திலுள்ள கந்தபுரியின் ஒருபாகத்தில் தனியான வீட்டில் வசிக்க ஆரம்பித்தாள். அப்பெண்களாகிய கற்பகவல்லியும் கோமளவல்லியும் சொற்பவயதை யடைந்து தங்கள் பெற்றோர்களைப்பற்றி வினவியபோதும், அவர்களுடைய தந்தை ராணுவசேவையில் இருந்து இறந்துவிட்டதாயும், அதனால் மனமுடைந்து அவர்களுடைய தாயாரும் இறந்துவிட்டதாயும் தான் அவர்களுடைய தந்தையின் சகோதரி என்றும் பொய்சொல்லி வைத்தாள். சுந்தரம்மாள் என்னும் கமலம் பொய் பேசாத உத்தமியாயினும் சந்தர்ப்பத்தை யொட்டி இவ்வாறு கூற வேண்டியதாயிற்று. பச்சையப்பபிள்ளையால் அளிக்கப்படும் பொருளைக் கொண்டு சுந்தரம்மாள் கற்பகவல்லியையும் கோமளவல்லியையும் காப்பாற்றிவந்தாள்.

கமலம் இரத்னபுரியைவிட்டுப் புறப்படுவதற்குமுன் தன் சகோதரியாகிய மாரகதவல்லி மாரனுடன் ராமாபுரத்தில் வசிப்பதையும், அவன் மூலம் அவளுக்கு இரங்கம்மாள் அம்புஜம் என்னும் இருபெண்கள் பிறந்திருப்பதையும் அறிந்துகொண்டிருந்தாள். மேனகைக்கு நேர்ந்த அவதிகளையெல்லாம் மரகதவல்லியிடம் தெரிவித்தாளென்றாலும், தான் பெயர் மாற்றிக் கொள்ளப்போவதையாவது இன்ன இடத்தில் போய்த் தங்குவதென்பதையாவது அவளிடம் அறிவிக்கவில்லை. ஆகவே

18656

கமலம் சுந்தரம்மாள் என்னும் பெயருடன் கற்பகவல்லி, கோமளவல்லி ஆகிய இருவருடன் கந்தபுரியில் வசிப்பது மாகதவல்லிக்குத் தெரியாது. சுந்தரம்மாள் தானே உபாய மாகக் கல்விகற்றவளாதலால் அச்சிறு பெண்கள் இருவருக்கும் அவளே கல்வி கற்பித்தாள். பாடசாலைகளுக்கு அனுப்ப முடியவில்லை. எனினும் அப்பெண்களுக்குக் கல்வி அறிவும், மற்ற குடும்ப சம்பந்தமான சாமர்த்தியங்களும், நற்குண நல்லொழுக்கமும் அமைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் அவளேசெய்தாள். அப்பெண்களும் தங்கள் அத்தையென்று நம்பிய சுந்தரம்மாளிடம் பட்சமாக வளர்ந்து வந்தார்கள். அவ்விருவரில் இளையவளாகிய கோமளவல்லி மிக அடக்கத்துடனும் நற்குண நல்லொழுக்கத்துடனும் வளர்ந்து வந்தாள். மூத்தவளாகிய கற்பகவல்லிமட்டும் சிறிது டாம்பீக வாழ்க்கையில் பிரியமுள்ளவளாயும், பொய், சூது முதலிய வஞ்சனைகள் உபாயமாக உடையவளாயும் இருந்தாள். பிறகு கற்பகவல்லிக்கும் கோமளவல்லிக்கும் என்ன நேர்ந்ததென்பதும், சுந்தரம்மாள் பாரிசநோயால் தாக்கப்பட்டுப் பின்பு எவ்வாறு இறைவனருளால் திடீரென்று விடுதலையடைந்தாள் என்பதும் நேயர்களுக்குத் தெரியும்.

166 - வது அத்தியாயம்

பச்சையப்ப பிள்ளையின் பணத்தைத் தவறாமல் சுந்தரம்மாள் பெற்றுவந்ததால் அவர்கள் சுகமாக எத்தகைய கவலையுமின்றி வாழ்ந்துவந்தார்கள். அருமைநாதம்பிரபு தான் பச்சையப்பபிள்ளை என்று அப்பெண்களுக்கோ

மற்றவர்களுக்கோ தெரியாது. சுந்தரம்மாள் ஒருத்திக்குத் தான் தெரியும். அருமைநாதம்பிரபுவும் இதை மிக இரக சியமாய் வைத்துக்கொண்டிருந்தார். அவரது மனைவிக்கு அவர் விஷயத்தில் சிறிது சந்தேகம் ஏற்பட்டதென்றாலும் அவர் மிக நல்லவராய் இருந்தபடியாலும், தன்னிடம் அன் புடன் நடந்துகொண்டபடியாலும் அவள் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமல் இருந்தாள். இப்படியிருக்கும் நாளில் அவரது மனைவிக்கு உபாயமாக நோய்கண்டு அவள் திடீரென இறந்துவிட்டாள். அப்போது அவர் யாருக்கும் அச்சப் படவேண்டிய அவசியமில்லாமலிருந்தும் தான் முன்பு ஏற் படுத்திய முறையை மாற்றவில்லை. ஏனெனில் தான் வாலி பத்தில் செய்த தவறு யாருக்கும் தெரியக்கூடாதென் பது அவரது எண்ணம். மேலும் எப்படியாவது அவர் களுக்குப் பணம் சேரவேண்டியது முக்கியமே யொழிய எந்தப் பெயரால் சேர்ந்தாலென்ன. இவ்வாறு அவர் கள் வாழ்ந்துவரும் நாளில்தான் அருமைநாதம் பிரபு இரத்னபுரியின் ஓரத்திலுள்ள பள்ளத்தோட்டம் என்னும் ஆரோக்கிய ஸ்தலத்தில் ஒரு மாளிகையில் வாழ்ந்துவந்த தேவராயனுடைய மனைவியும், சுகசிங்கம் பிரபுவின் சகோதா ரின் புத்திரியுமான தெய்வயானையின்மீது காதல்கொண்டு அவருடன் இரகசியக் கூட்டுறவு ஏற்படுத்திக்கொள்ள முயன்று, தேவராயன் வீட்டில் இல்லையெனத்தெரிந்து பட்டுநூலேணியின் மூலம் அவளுடைய அறைக்குள் சென்ற போது திடீரென்று தேவராயன் திரும்பி வர, அவள் அவரை ஸ்நானத்தொட்டியில் போட்டு மூடிவிட்டுக் கணவனுடன் தூரதேசம் போய்விட்டதால் அவர் எதிர்பாராத வகையில் இரகசிய, அகாலமரணம் அடைய நேரிட்டது.

ஆகவே அதுமுதல் சுந்தரம்மாளுக்குக் கிடைக்கவேண்டிய பணமும் கிடைப்பது நின்றுவிட்டது. சுந்தரம்மாளும் பாரிசநோயினுல் பேச முடியாமலும், நகர முடியாமலும் கிடந்தாள். எப்போதோ ஒருமுறை பச்சையப்பபிள்ளை என்பவரிடமிருந்து பணம் கிடைப்பதாகவும், அவர் விலாசம் இன்னதென்றும் தெரிவித்திருந்தாள். அதன்மேல் சகோதரிகளிருவரும் என்னசெய்வதென்று ஆலோசித்துக் கடைசியாக மூத்தவளான கற்பகவல்லி பச்சையப்பபிள்ளையைத் தேடிக்கொண்டு இரத்னபுரிக்குப் புறப்பட்டாள். ஆனல் அங்கு பச்சையப்பபிள்ளை என்று ஒருவர் இருப்பதாகவோ இருந்ததாகவோ தெரியவில்லை.

ஆனல் அவள் கூறிய விலாசத்தில் அருமைநாதம்பிரபு என்று ஒருவர் இருந்ததாகவும், அவரும் சொற்ப காலமாக எங்கோ காணப்படவில்லையென்றும், அவருடைய குமாரனை மதுரைநாயகம் பிரபு தான் இருப்பதாகவும் விசாரித்ததில் தெரியவந்தது. அவள் மனந்துணிந்து மதுரைநாயகம்பிரபு என்னும் யௌவன புருஷரைக்கண்டு விசாரித்தபோதும் பச்சையப்பப் பிள்ளையைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆனல் கற்பகவல்லி மதுரைநாயகம் பிரபுவின் எதிரில் உட்கார்ந்து பேசும்போதுமட்டும், அவன் தன் தந்தை சொற்பகாலமாகத் திடீரென்று மறைந்துபோனதால் துக்கப்பட்டுக்கொண்டிருந்தானென்றுலும் அத்துக்கம் மறைந்து அப்பெண்ணினிடம் அவனுக்கு அன்பும் ஆதரவும் ஏற்பட்டது. அவளுடைய அழகைக்கண்டு அவன் மோகிக்கவில்லை. கெட்ட எண்ணம் உதிக்கவில்லை. ஆனல் இயற்கைதேவி அவனுடைய ஆத்மாவிடம் "அவள் உன் சகோதரி" என்று கூறுவதுபோல் தோன்றி அவளிடம் அனுதாபமும் அன்பும் ஏற்பட்டது. கற்பகவல்லி தான் எதிர்பார்த்த பதில் கிடைக்காமையால் அம்மாளிகையை விட்டுப் புறப்பட்டாள்.

மதுரைநாயகம் பிரபுவின் வீட்டைவிட்டு வெளிப்பட்ட கற்பகவல்லி பச்சையப்பபிள்ளை என்பவர் எந்தப் பாங்கியில் பணம் கட்டிவந்தாரோ அந்தப் பாங்கிக்குச் சென்று விசாரித்துப் பார்த்தாள். அவர்களும் பச்சையப்பபிள்ளை என்பவர் யார் என்று தங்களுக்குத் தெரியாதென்றும், அவர் பெயரால் பணம் வந்துகொண் டிருந்ததுமட்டும் தங்களுக்குத் தெரியுமென்றும், அவள்போய்த் தேடிய மதுரைநாயகம் பிரபுவின் வீட்டு விலாசம்தான் அவர்களுக்கும் பச்சையப்ப பிள்ளையின் விலாசமாகக் கொடுக்கப்பட்டிருந்ததென்றும் கூறிவிட்டார்கள். ஐயோ பாவம்! கற்பகவல்லி என் செய்வாள்? கையில் காலணு இல்லை. வருவாய்க்கு வழி இல்லை. அவள் தனக்காக மட்டும் வருந்தவில்லை. தனது அன்புள்ள சகோதரி கோமளவல்லியும், பாரிசரோயால் அவஸ்தைப்படும் தனது அத்தை சுந்தரம்மாளும், தானுமாக வருவாயின்றி என்னென்ன கஷ்டங்கள் நேரிடுமோ என்று நினைத்தபோதே அவள் தேகம் முழுதும் நடுங்கியது. எப்படியாவது இருக்கட்டும் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்துவிடுவோம் என்று ரத்னபுரியிலிருந்து கந்தபுரிக்கு மோட்டார் பஸ்கள் புறப்படும் இடத்துக்கு வந்தாள். அங்கே அவள் கையிலிருந்த சிறு தொகையும் களவுபோயிற்று. கந்தபுரிக்குப்போய்ச் சேரவும் பணமில்லாமலாகிவிட்டது. அவ்வளவு பெரிய பட்டணத்தில் களவாடிய காலிகளைக் கண்டுபிடிப்பதும் மிகச் சிரமமென்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

கற்பகவல்லி என்னசெய்வதென்று ஒன்றும் தோன்றாமல் துக்கக்குறியுடன் யோசித்துக்கொண்டு ரஸ்தாவில் நின்றுகொண்டிருந்தபோது திடீரென்று வயதான ஒருமாது அவளிடம் தாய்போல் அன்புகாட்டி மிக அனுதாபமுடையவள் போல் அவளுக்கென்ன துக்கம் என்று விசாரித்தாள். கற்

பகவல்லிக்கு நவீனநாகரிகம் வாய்ந்த ரத்னபுரிபோன்ற நகரில் நடைபெறும் சூதுவாதுகளெல்லாம் தெரியாதாகையால் அவள் உண்மையிலேயே தன்னிடம் மிக அனுதாபமும் அன்பும் உடையவளென்று நினைத்துக் கள்ளங் கபடமின்றித் தான் எதற்காக ரத்னபுரிக்கு வந்தாளென்பதையும், தனக்கு நேர்ந்த ஏமாற்றத்தையும், தன் சொற்பதொகையும் களவுபோன விஷயமும் விவரமாக அவளிடம் தெரிவித்துவிட்டாள். அதற்கு அம்மாது மிகவும் வருந்துபவள்போல் பாவனைகாட்டி அவள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லையென்றும், தான் அவளை அழைத்துக்கொண்டுபோய் சகல சௌகரியங்களும் அளித்துக் காப்பாற்றுவதாகவும் கூறினாள். கற்பகவல்லியின் அழகையும், கபடமற்றதன்மையையும் கண்டு அம்மாது சந்தோஷமடைந்து அவளைத் தன் தீயதொழிலுக்குப் பயன்படுத்திக்கொள்வது என்று தீர்மானித்து இவ்வாறு கற்பகவல்லியிடம் கூறினாள். உடனே அம்மாது ஒரு வாடகை வண்டியை அமர்த்தி அதில் கற்பகவல்லியையும் ஏற்றிக்கொண்டு தன் வீட்டுக்குச் சென்றாள். இவ்வாறாக கள்ளங் கபடமற்ற நமது கற்பகவல்லி, ரத்னபுரியிலேயே மிகக்கொடியவளும், விபசாரத்தில் தலைசிறந்து விளங்குபவளுமான கௌரியின் கையில் சிக்கிக்கொண்டாள் பாவம்!

ஆனால் கௌரி தந்திரத்தில் சிறந்தவள். வந்த முதல் நாளே கற்பகவல்லியின் மனதில் எத்தகைய சந்தேகமும் உண்டாகலாகாது என்பதற்காக எந்த ஆடவரையும் சேர்க்காமல் அவளுக்கென நன்றாக அலங்கரிக்கப்பட்ட தனியறையைக்கொடுத்து இதர சௌகரியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தாள். உடனே அவள் நேராக சுகசிங்கம்பிரபுவின் வீட்டுக்குச் சென்று அப்பிரபுவிடம் கற்பகவல்லியை விற்று விடலாமென நினைத்தாள். ஆனால் கௌரி அப்பிரபுவின் வீட்

டுக்குச் செல்லும்போது அவர் தன் மாளிகையில் இல்லாமல் எங்கேயோ சென்றிருந்தார். ஆகவே கௌரி தன்வீட்டுக்கு வரும்வழியில் மற்றொரு யோசனைசெய்தாள். அதாவது இரத்தினபுரி வடக்குப் பேட்டையில் சாமிசெட்டி வீதி 13-வது நெ. இல்லத்தில் இருக்கும் பத்மாவதியம்மாள் வீட்டுக்குச்சென்றாள். இதற்குமுன் கௌரி இத்தகைய சிறுமிகள் ஒருவர் இருவரை பத்மாவதியம்மாளிடம் விட்டுப் பெருந் தொகையைக் கமிஷனாகப் பெற்றிருக்கிறாள். அந்தப் பெண்களனைவரையும்விட நமது கற்பகவல்லி அழகில் சிறந்தவளாய் இருந்தபடியால் அதிக கமிஷன்கிடைக்கும் என நினைத்து அவ்வீட்டுக்குச் சென்றாள். கௌரியைப் பார்த்ததும் பத்மாவதியம்மாள் அதிக ஆவலுடன் வரவேற்றாள்.

கௌரியும் பத்மாவதியம்மாளும் தனியாக ஒரு அறையில்போய் உட்கார்ந்துகொண்டதும் கௌரி பின்வருமாறு கூறினாள்:—"நான் கடைசியாக மிக ரூபலாவண்யம் வாய்ந்தவளும் உன் தொழிலுக்கு எல்லாவகையிலும் ஏற்றவளுமான ஒரு யௌவனபெண்ணைக் கண்டு பிடித்திருக்கிறேன். அப் பெண்ணை உன்னிடம் ஒப்படைப்பதற்காக நீ எனக்குக் குறைந்தது இருநூறு பவுன்களேனும் கொடுக்கலாம். நீ அவளை சுகசிங்கம்பிரபு முதலிய எவருக்கேனும் பெருந் தொகைக்கு விற்றுவிடலாம். நான் கேட்டதொகையை நீ கொடுப்பதானால் இப்போதே அந்த ரூபவதியை உன்னிடம் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன். நீ முன்பு ஒருமுறை என்னிடம் கூறியபோது எப்படிப்பட்ட அழகும் குணமும் வாய்ந்தபெண் உனக்குத்தேவை என்று சொன்னாயோ அப்படிப்பட்ட குணமும் அழகும்வாய்ந்தவள் இப்பெண் ஒருத்தியே என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவளுடைய அழகிலோ குணத்திலோ ஒருகுற்றமும் காணமுடியாது. தகுந்த

அளவு உயரமுள்ளவளாயும், அதற்கேற்ற தேகவன்மை வாய்ந்தவளாயும், நல்ல அழகிய கண்ணைக் கவரத்தக்க மார்பை உடையவளாயும், 22-அல்லது 23-வயது தான் ஆனவளாயும் அழகிய முத்துப்போன்ற பற்களையுடையவளாயும், நல்ல எலுமிச்சம்பழம்போன்ற மேனியையுடையவளாயும் இருக்கின்றாள். அவளுடைய பார்வையோ எப்படிப்பட்ட முனீஸ்வார்களையும் அவளிடம் அடிபணியச்செய்யும் என்பது திண்ணம். சிறிது வெட்கமும் நாணமும் உடையவளாயிருக்கிறாளென்றாலும் நாம் நமது சாமர்த்தியத்தால் அவளைச் சரிப்படுத்திக்கொள்ளலாம்.''

இதையெல்லாம் கௌரியின் வாயிலிருந்து கேட்ட பத்மாவதியம்மாள் மிக சந்தோஷமடைந்தாள். உடனே அப்பெண்மணியைக் கொண்டுவந்து விட்டுவிடும்படியும் அவள் கேட்டபடியே கமிஷன் கொடுத்துவிடுவதாகவும் கூறினாள். உடனே கௌரி தன் வீட்டுக்குச்சென்று கற்பகவல்லியிடம் ஏதோ தக்க சமாதானத்தைச் சொல்லி அவளை சாமிசெட்டி வீதியிலுள்ள பத்மாவதியம்மாள் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். இதனால் கற்பகவல்லி, விபசாரத்திற் சிறந்த இடமாகிய கௌரியின்வீட்டில் சிலமணிநேரம் தங்கியிருந்தாளென்றாலும் அவ்வீட்டில் புகும்போது எவ்வளவு சுத்தமாக நுழைந்தாளோ அவ்வளவு பரிசுத்தமாகவே வெளிவந்தாள். மேலும் கௌரியின்வீடு அப்படிப்பட்ட இழிவான பெயரையுடையதென்றும் அவள் சந்தேகிக்கவில்லை. ஏனெனின் அவள் இருந்தவரையில் அங்கு ஆடவர் எவரும் வரவில்லை. மேலும் அவள் தனக்கெனவிடப்பட்ட அறைதவிர வேறொன்றையும் அறியாள். ஆகவே கௌரி அழைத்துச் செல்லுமிடத்திலும் குற்றம் ஏதேனுமிருக்கலாமென அவள் சந்தேகிக்கவில்லை.

கற்பகவல்லியைப் பத்மாவதியம்மாள் வீட்டில் கொண்டு வந்துவிட்டதும் கௌரி ஏதோ தொகையை வாங்கிக்கொண்டு அங்கிருந்து வெளியேறி விட்டாள். பத்மாவதியம்மாளைப் பற்றி வாசகர்களுக்கு முன்னமே தெரியும். அவள் வயது நாற்பதுக்குமேல் ஐம்பதுக்குள் இருக்கும். மிக்க அழகு வாய்ந்தவள். அவள் மிக சாமர்த்தியமாகவும் பக்குவமாகவும் பேசக்கூடியவளாதலால் சொற்ப நேரத்துக்குள் கற்பகவல்லிக்கு அவளிடம் நம்பிக்கையும் அன்பும் ஏற்பட்டுவிட்டது. கற்பகவல்லி தனது நிலைமையைப்பற்றி கௌரியிடம் சொல்லிக் கொண்டதுபோலவே பத்மாவதியம்மாளிடமும் விவரமாகக் கூறிக்கொண்டாள். ஆகவே சிறிது நேரத்துக்குள் பத்மாவதியம்மாள் கற்பகவல்லியின் நிலைமைகளையெல்லாம் அறிந்துகொண்டுவிட்டாள்.

பிறகு பத்மாவதியம்மாள் கற்பகவல்லியிடம் பின்வருமாறு கூறினாள்:—நீ யௌவனம் வாய்ந்தவளாக இருப்பதுடன் மிக்க அறிவுள்ளவளாயும், உறுதியான மனோபாவனையுடையவளாயும் இருக்கிறாய். நீயோ இப்போது மிகவும் நெருக்கடியான நிலைமையில் சிக்கிக்கொண்டிருக்கிறாய். உன்னை மிக்க செல்வாக்கானதும் சௌகரியம் வாய்ந்ததுமான நிலைமையில் வைக்க என்னால் முடியுமென்று நிச்சயமாக நம்புகின்றேன். ஆகவே தரித்திரத்தில் மூழ்கி அவஸ்தைப்படாமல் செல்வக்களஞ்சியத்தில் நின்று சுகமாக வாழலாம். நீ அதிகம் நேசிக்கின்ற உன் சகோதரி அத்தையும் தங்க வீடு இல்லாமலும், செலவுக்குப் பணமில்லாமலும் துயரப்பட வேண்டியதில்லை. நீ அவர்களுக்கு மாதாமாதம், முன்பு பச்சையப்பபிள்ளை அனுப்பிக்கொண்டிருந்ததுபோல அனுப்பிவரலாம். நீ எவ்வளவுதான் கள்ளங் கபடமற்றவளாக இருந்தபோதிலும் நீ கண்ணைக் கவரத்தக்க அழகு

வாய்ந்தவளாக இருப்பதால் ஏதோ கிராமத்தில் ஒரு மூலேயில் இடப்பதைவிட இதுபோன்ற பட்டணங்களில் பெண்க ளிடையே திலகமாக விளங்கி எவ்வளவு அதிகமான பணத் தையும் சௌகரியத்தையும் பெறமுடியுமோ அவ்வளவும் பெறுவதுதான் புத்திசாலித்தனமானது என்பதை நீ உண ராமல் இருக்கமுடியாது. நீ உன்னை என்னிடம் அர்ப்பணம் செய்துவிட்டால், நான் சொல்கிறபடியெல்லாம் கேட்பதாக இருந்தால் நான் மேலேகூறியபடி சகலவித இன்பங்களையும் நீ அனுபவிக்கலாம். பொறாமைப்படத்தக்க அவ்வளவு உன் னத நிலைமையில் உன்னை நான் வைப்பேன். அதனுல் பெரிய பிரபுக்களெல்லாம் உன்னை மணந்துகொள்ள நாடுவார்கள்.

பத்மாவதியம்மாள் இவ்வாறு கூறியதைக்கேட்ட கற் பகவல்லி, ஒன்றும் அர்த்தம் புரிந்துகொள்ளாமல் திக்பிரமை யடைந்து நன்ருக விளக்கிக் கூறும்படி கேட்டுக்கொண்டாள். எனினும் திக்கற்ற நிலைமையில் இருப்பதைவிட இவ்வாறு திடீரென்று உன்னத ஸ்தானத்தை யடைவதென்ருல் அதில் சிறிது ஆசையும் ஏற்பட்டது. பத்மாவதியம்மாள் இனி தான் என்னமுறையை அனுஷ்டிக்கப்போகிருள் என்பதை இப் போதே திடீரென்று கூறமுடியாதென்றும், அவள் தன்னி டம் சரணுகதியடைந்து தான் கூறுகிறபடியெல்லாம் மறுப் பின்றிக்கேட்டால் சுகமடையலாமென்றும் தாம் நம்பிக்கைக் குப் பாத்திரமானவள் என்பதை ருஜுப்பிக்க முடியுமென் றும் கூறிவிட்டு அவளுடைய திக்கற்ற நிலைமையை சாதக மாகக்கொண்டு, தாமதம் செய்ய அவகாசமில்லையென்றும், இஷ்டமிருந்தால் தான் சொல்கிறபடி கேட்கலாமென்றும், இன்றேல் மறுத்துவிட்டுப் போய்விடலாமென்றும் சிறிது மிரட்டுதலுடன் கூறினாள்.

கற்பகவல்லி ஒன்றும் தோன்ருதவளாய் திக்பிரமைப் புடன் நின்ருள். பத்மாவதியம்மாளோ தன் சாமர்த்தியம்

முழுதையும் உபயோகித்து மேலும் மேலும் விஷயங்களை விளக்கி அவள் தன் பேச்சின்படி நடந்தால் எவ்வாறு சுக மடையலாமென்பதை விவரித்துக்கூறி அவள் மனதைக் கவர்ந்தாள். மேலும் பத்மாவதியம்மாள் கூறியதாவது:—
"நான் ஏதோ யோக்கியதை யற்றவளென்ருே, பெண்களின் மானத்தை விற்று வயிறு வளர்ப்பவளென்ருே நினைத்து விடவேண்டாம். இந்நகரில் இத்தெருவுதான் நாகரிகம் மிக்க தெருவு. அதிலும் என் வீட்டைப் பார்த்தாலே இது மிக்க மரியாதை வாய்ந்த வீடு என்பது புலனாகும். இதோபார்! இந்த பட்டயத்தில் என் பெயரைப்போட்டு நான் அரச மாளிகையில் செல்வாக்கு பெற்றவள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதோ இந்த மேஜையின்மீது எவ்வளவு விலாசங்களடங்கிய கார்டுகள் கிடக்கின்றன பார். அப்பிரபுக்களெல்லாம் என் தயவு தாட்சண்யத்தை நாடி என் வீட்டுக்கு அடிக்கடி வருபவர்கள். இந்த ரத்னபுரி ராஜ்ய நிர்வாகத்தில் பெரிய பதவிகளைப்பெற்ற ஆடவரும் மாதரும் இங்கு வருகிறார்களென்பதை நீ அந்த கார்டுகளினின்றும் தெரிந்து கொள்ளலாம். இதோபார்! எத்தனையோ பணக்காரர்களும், பிரபுக்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் தங்கள் தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைப்புப்பத்திரம் அனுப்பியிருக்கிருர்கள். இதுமட்டுமா? இங்கேபார்! ரத்னபுரியின் இளவாசரே தன் கைப்பட ஒரு கடிதம் எழுதி பெரிய சன்மானமும் செய்திருக்கிருர். அதில் எனதன்புள்ள பத்மாவதியம்மாள் என்று எழுதியிருப்பதைப் பார். இளவரசர் எல்லாருக்கும் அப்படி எழுதுவாரா? நான் அங்கு அதிக செல்வாக்குள்ளவளாக இருப்பதால்தான் இவ்வாறு எழுதியிருக்கிருர். என்னுடைய சகோதரியின் புத்திரனை செல்லப்பப்பிரபுவுக்கும் இளவரசர் கடிதம் எழுதி ஒரு விருந்துக்கு வரும்படி கேட்டுக்கொண்டிருக்கிருர். அதில் ஆரம்பத்தில் எனதன்

புள்ள செல்லப்பப்பிரபு என்றும், கடைசியில் உமது அன்புள்ள நண்பன் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதனுலெல்லாம் நான் எவ்வளவு உயர்ந்த நிலைமையில் இருக்கிறேனென்பது தெரிகிறதல்லவா? மேலும் இதனுல் நீ என்னிடம் பரம நம்பிக்கை வைக்கலாமென்று ஏற்படவில்லையா? ஆகவே நீ ரத்னபுரியிலேயே தங்கிவிடுவதென்றும், கந்தபுரிக்குப் போவதில்லையென்றும் முடிவு செய்துவிடவேண்டும். நீ உன் தங்கை கோமளவல்லிக்கும் ஒரு கடிதம் எழுதிவிட்டு அதில் நூறுபவுன் நோட்டு ஒன்றை அனுப்பிவிட்டால் நீ இங்கு தங்குவதற்குரிய என்ன காரணங்களைச் சொன்னுலும் அதே அவள் சரி என்றே நினைப்பாள். உன் அத்தைக்கோ பாரிச நோய் தாக்கியிருப்பதால் அவளுக்கு ஒரு விஷயமும் தெரியப்போவதில்லை."

இவ்வாறு பத்மாவதியம்மாள் கூறியதைக் கேட்ட கற்பகவல்லி, தன் சகோதரியையும், நோய் வாய்ப்பட்டுள்ள அத்தையையும் காப்பாற்றலாமே என்னும் எண்ணத்தாலும், தானும் வறுமையில் சிக்கிக்கொள்ளாமல் நல்ல சௌகரியமான வாழ்வை யடையலாமென்னும் நினைப்பினுலும் பத்மாவதியம்மாள் கூறுகிறபடியே நடந்துகொள்வதாக ஒப்புக்கொண்டுவிட்டாள். அன்றையதினம் தபால் எழுதுவதற்குச் சாவகாசமிருந்தது. கந்தபுரியில் சகோதரி கோமளவல்லி மறுநாட்காலை கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பாளாகையால் அவளுக்குச் சமாதானம் ஏற்படும்படி ஏதேனும் கடிதம் எழுதிவிடவேண்டும் என்று கற்பகவல்லி தீர்மானித்தாள். என்ன எழுதுவதென ஆலோசனை கூறும்படி பத்மாவதியம்மாளைக் கேட்டாள். பத்மாவதியம்மாள் பொய்க்கதைகளைச் சிருஷ்டிப்பதில் மிகச் சாமர்த்தியம் வாய்ந்தவள். அவள் சற்றுநேரம் யோசனைசெய்து ஒரு உபாயத்தை

கண்டுபிடித்தாள். அதாவது கற்பகவல்லி இரத்தினபுரிக்கு வந்த பிடத்தில் பச்சையப்பப்பிள்ளை அகப்பட்டதாகவும்; ஆனால் அவர் இப்போது வேறு தெருவுக்குக் குடிபோய் விட்டதாகவும், ஏதோ தவறுதலாகப் பணம் அனுப்புவது நின்றுவிட்டதென்று அவர் சமாதானம்கூறி உடனே நூறு பவுன் நோட்டைக் கொடுத்ததாகவும், அதை அக்கடிதத்துடன் அனுப்பியிருப்பதாகவும், தான் இரத்தினபுரியிலேயே சொற்பகாலமேனும் தங்கியிருக்க வேண்டுமென அவர் விரும்புவதாயும் கடிதம் எழுதிவிடும்படி யோசனை கூறினாள். பத்மாவதியம்மாள் சொல்லிவந்தபடியே கற்பகவல்லி கடிதத்தை எழுதி முடித்து ஒரு ஆள்மூலம் தபாலில் போடும்படி அனுப்பிவிட்டார்கள்.

கடிதத்தை அந்த ஆளிடம் கொடுத்தது தான் தாமதம், கற்பகவல்லி தான் ஏதோ ஒருவகையில் ஏமாற்றப்பட்டுவிட்டதாக உணர்ந்தாள். ஆனால் இனி தான் என்னசெய்தாலும் அங்கிருந்து தப்பித்துச் செல்லமுடியாது என்பதையும் அறிந்தாள். கற்பகவல்லியின் மனதில் சிறிது கஷ்டமாகத்தான் இருந்தது. தனக்கு ஏற்படப்போகிற புதிய வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள அவளுக்குச் சிறிதும் மனமில்லை. ஆயினும் என் செய்வாள்? வலையில் சிக்கிக்கொண்டதுபோல் அகப்பட்டுக்கொண்டாள். மறுநாட்காலை பத்மாவதியம்மாள் வாடகை வண்டி யொன்றை அமர்த்தி அதில் கற்பகவல்லியை உட்கார வைத்துக்கொண்டு அந்நகரின் அழகான தெரு ஒன்றுக்கு அழைத்துச்சென்று அத்தெருவிலுள்ள வீடுகளனைத்தையும்விட மிக்க டாம்பீகமாயும், பார்வைக்கு அழகாயும் இருந்த வீட்டைக் காண்பித்தாள். அவ்வீட்டைப் பார்த்ததும் கற்பகவல்லிக்கும் மிகச் சந்தோஷமாய்விட்டது. உடனே அதன் சொந்தக்காரர் யாரென விசாரித்துச்சென்

ரூர்கள். செல்லும் வழியில் பத்மாவதியம்மாள் கற்பகவல்லி யிடம் பின்வருமாறு கூறினள்:—

"இதோ இந்த அழகியவீடு, வாடகைபேசி முடிந்ததும் உன்னுடைய தாகிவிடும். நீ இப்போதுள்ள உன் பெயரை மாற்றிக்கொண்டு வேறுபெயர் வைத்துக்கொள்ளவேண்டும். நீ கந்தபுரியிலிருந்து வந்த கற்பகவல்லி என்பது யாருக்கும் தெரியாது. மனதைக் கவரத்தக்கதாகவும், பெரிய மனிதர் குடும்பத்தில் வைக்கப்படுவதாகவுமுள்ள ஒரு பெயரை நீ வைத்துக்கொள்ளவேண்டும். நானே யோசனை செய்கிறேன். நான் இன்னும் பலவித யோசனைகளையும் சங்கதிகளையும் கூறுவேனல்லவா? அதைக் கேட்கும்போது நீ நடத்தையிலும் குணத்திலும் எவ்வளவோ மாறுதலடைந்துவிடுவாய். நான் போடும் திட்டங்களுக்கேற்ப நீ மிக்க அழகுடையவளாய் இருப்பதால் பெரிய பெரிய இடங்களில் எப்படிப் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வது என்பதை அறிந்துகொள்வாய். இப்போது இவ்விஷயங்களை உன்னிடம் பேசிக்கொண்டிருக்கையில் இன்று காலை பத்திரிகையில் படித்த ஒருபெயர் ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது மதனவல்லி என்பதாகும். ஆம்; பேஷ்! இதுதான் அழகானபெயர். மற்றும் சில பெயர்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. ஆனல் அவைகளெல்லாம் இவ்வளவு நன்ருகயில்லை. இப்போது என் அன்புள்ள நட்பினளே! உன்னை கன்னி மதனவல்லி என்று அழைத்துக் கை குலுக்குவதில் நான் மிகச் சந்தோஷப்படுகிறேன்."

இவ்வாறு கூறிக்கொண்டே தன்சொற்களுக்கேற்ப பத்மாவதியம்மாள் கற்பகவல்லியின் கையைப் பிடித்துக் குலுக்கினள். பத்மாவதியம்மாளின் திட்டங்கள் எவ்வளவு ஆழமானதென்பதை கற்பகவல்லி அறியாதவளாதலால் முதல்முறை

யாகக் கூறப்பட்ட இத்திட்டத்துக்கு எத்தகைய மறுப்பும் கூறலாகாதெனக் கருதி தன் பெயரை மதனவல்லி என்று மாற்றிக்கொள்ளச் சம்மதித்தாள். இவர்கள் இவ்வாறு பேசி முடிப்பதற்குள் அவர்கள் ஏறிவந்த வண்டியும் தங்களுக்கு வேண்டிய வீட்டின் சொந்தக்காரருடைய வீட்டின் முன் சென்று சேர்ந்தது. அங்கு அவரிடம் பத்மாவதியம்மாள் அதிகம் பேரம்பேசாமல் பெருமையாகவே அவர் கூறிய வாடகையையே கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அவசியமான அட்வான்சும் கொடுத்துவிட்டு வாடகைச்சீட்டை மதனவல்லி யின் பெயருக்கே எழுதும்படி கூறினாள். இதனால் மதனவல்லிக்குத் தன் பெயரால் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு வாங்குகிறோமே என்னும் சந்தோஷமும் திருப்தியும் ஏற்பட்டது. உடனே அம்மாதர்களிருவரும் தாங்கள் வந்த வண்டியில் ஏறிக்கொண்டு பெரிய கடைத்தெருவுக்குச் சென்றார்கள். கற்பகவல்லி தன் வீட்டில் எல்லா அறைகளிலும் வைத்துக்கொள்ள மேஜை, நாற்காலி பெஞ்சுகள், பீரோக்கள், பெரிய நிலைக்கண்ணாடிகள், அழகிய படங்கள் முதலிய விலையுயர்ந்த சாமான்களைப் பார்த்து வாங்கி அவைகளுக்கான பணத்தையும் கொடுத்துவிட்டு எல்லாம் சிலமணி நேரத்துக்குள் குறிப்பிட்ட வீட்டுக்குப்போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டார்கள். கற்பகவல்லியும் சாமான்களை வாங்குவதிலும், மாதிரி பார்ப்பதிலும், விலை பேசுவதிலும் அதிக சிரத்தை காட்டியதைக்கண்டு பத்மாவதியம்மாள் மிகவும் சந்தோஷப்பட்டாள். அந்த சாமான்கள் வாங்கியவைகளுக்கும் ரசீது கற்பகவல்லியின் பெயராலேயே எழுதும்படி சொன்னாள்.

அங்கிருந்து அவர்களிருவரும் உடனே அதேவண்டியில் புறப்பட்டு தங்கம், வெள்ளி சாமான்கள் விற்கும் ஷாப்

கடைக்குச் சென்று கற்பகவல்லி வசிக்கப்போகும் வாழ்க்கைக்கேற்ப வெள்ளி, தங்க சாமான்களையும், பொன் கடிகாரம் முதலியவற்றையும் சில வைரமோதிரங்களையும் வாங்கினர்கள். அதற்கும் பத்மாவதியம்மாளே பணம் கொடுத்துக் கற்பகவல்லியின் பெயராலேயே ரசீது வாங்கினாள். இவைகளையெல்லாம் பார்க்கும்போது கற்பகவல்லிக்கு ஒருபுறம் சந்தோஷமும், மற்றொருபுறம் திக்பிரமையும் அதிகரித்துவிட்டது. உடனே அவர்கள் ஒரு வக்கீலின் வீட்டுக்குச் சென்றார்கள். அங்குமட்டும் பத்மாவதியம்மாள் ஒருத்தியே வக்கீல் வீட்டுக்குள் சென்றாள். கற்பகவல்லியோ வண்டியிலேயே உட்கார்ந்திருந்தாள். ஆதலால் வக்கீல் வீட்டில் என்ன நடந்ததென்பது அவளுக்கொன்றும் தெரியாது. மேலும் அவ்வளவுதூரம் யோசனை செய்யக்கூடிய சக்தியும் அவளுக்கிருக்கவில்லை. அவளை எதுவோ தெய்வலோகத்தில் கொண்டுபோய்விட்டதுபோல் இருந்தது. ஆகவே அவள் தனக்கு எதிர்காலத்தில் இன்னும் என்ன ஏற்படுமோ என்று சிந்திப்பதில் தன் கவனத்தைச் செலுத்தலானாள்.

வக்கீல் வீட்டிலிருந்து பத்மாவதியம்மாள் வெளியே வந்து வண்டியில் ஏறிக்கொண்டதும் வண்டி ஜவளிக்கடைகள் நிறைந்த தெருவிற்கு ஓட்டப்பட்டது. அவர்கள் இருவரும் பல கடைகளுக்கும் சென்று கற்பகவல்லிக்கு பகல் உடைக்கும், இரவு உடைக்கும், சாதாரண காலங்களில் வேண்டிய உடைக்கும், எங்கேனும் விருந்துக்குச் சென்றால் அதற்கு வேண்டிய உடைக்கும் ஏற்ற பலமாதிரியான ஆடைகளை வாங்கினர்கள். இன்னும் வாசனை சாமான்களையும் வாங்கினர்கள். இவைகளுக்கும் பத்மாவதியம்மாள் பணம் செலுத்திவிட்டு கற்பகவல்லியின் பேராலேயே ரசீது பெற்றாள். பிறகு அழகிய வண்டிகளைக் கட்டுவோர் தெருவுக்

குச் சென்று நாகரிகத்துக்கேற்ற அழகிய வண்டியொன் றைக் கற்பகவல்லியின் உபயோகத்துக்காக வாங்கினர்கள். நல்ல குதிரைகளாகப் பார்த்துவாங்க பத்மாவதியம்மாளுக் குத் தெரியாதாகையால் அவள் தனக்கு நீண்டகாலமாகத் தெரிந்த அதே வண்டிக்காரனிடம் சொல்லி நல்ல ஜதையாக ஒரு ஜதை குதிரை வாங்கித்தரும்படி சொல்லிவிட்டாள்.

அன்றைய பெரும்பாகத்தை இவ்வாறு பற்பல சாமான் களை வாங்குவதில் காலங்கழித்தார்கள். பத்மாவதியம்மா ளும், கற்பகவல்லியும் பத்மாவதியம்மாள் வீட்டுக்குத் திரும் பியதும் ஆகாரத்துக்குப்போனர்கள். அப்போது அவ்வீட் டுக்கு வந்த இருமாதர்களுக்கு கற்பகவல்லியை அறிமுகம் செய்துவைத்தாள். அவர்களில் ஒருத்தி ஜயதேவி, மற்றொருத்தி முன்பு இளவரசருடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்த ஒரு மாது; அவர்களிருவரும் கற்பகவல்லியின் அழகைக் கண்டு பிரமித்து அவளிடம் அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்துகொண்டார்கள். ஆகாரம் முடிந்ததும் அவர்கள் கற் பகவல்லி, அல்ல, மதனவல்லியைச்சுற்றி உட்கார்ந்துகொண்டு தங்கள் சூழ்ச்சியும் கபடமும் நிறைந்த பிரசங்கத்தைச்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். பிறகு கற்பகவல்லி தன் படுக்கை யறைக்குச் சென்று தலையணைமீது தலைவைத்து சாய்ந்ததும், அன்று பகல்முழுதும் அவள் அலைந்து திரிந்திருந்ததால் அலைச்சல் காரணமாகத் தூக்கம்வர அவள் அயர்ந்து தூங்கி விட்டாள். தனியாக இருந்து சிந்திப்பதற்கும் அவளுக்கு ஒய்வில்லாமற் போய்விட்டது.

மறுநாள் கற்பகவல்லியோ, பத்மாவதி யம்மாளோ வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை. ஆடைகளைத் தைப் பவர்களும், மற்றவர்களும் அங்கேயேவந்து வேண்டிய ஏற் பாடுகளைச் செய்துகொண்டுபோனர்கள். பகல் போஜனம்

ஆனதும் பத்மாவதியம்மாள் தன் வக்கீலை வரவழைத்தாள். வக்கீல் வந்துசேர்ந்ததும் அவரை ஒரு ஆசனத்தில் அமர்த்தி விட்டுக் கற்பகவல்லியிடம் பின்வருமாறு கூறலானுள்:—"எனதன்புள்ள பெண்ணே! நேற்று உனக்காக நான் எவ்வளவு சாமான்களை வாங்கி அதற்காகச் சுமார் இரண்டாயிரம் பவுன்வரை கொடுத்தது உனக்குத் தெரியும். எல்லாம் உன் பெயராலேயே வாங்கப்பட்டது. இப்போது உன்னிடம் ஒளி மறைவின்றி என் மனதிலுள்ளதைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நீ திடீரென்று பெரிய பணக்காரியாய் விட்டாய். உனக்கென்று தனிவீடும், அனேக நகைகளும், தட்டுமுட்டுச் சாமான்களும், விலையுயர்ந்த ஆடைகளும், இரட்டைக்குதிரை வண்டியும் வாங்கப்பட்டுவிட்டன. இது மட்டுமல்ல. இதோபார் இங்கு பாங்கிபுஸ்தகம் வைத்திருக்கிறேன். பாங்கியில் உன்பெயரால் ஆயிரம்பவுன் போடப்பட்டது. நீ உனக்கு அவசரமானபோது பாங்கியிலிருந்து வேண்டிய தொகையை எடுத்துக்கொள்ளலாம். இதனுலெல்லாம் உன்னை என் திட்டப்படி முன்னுக்குக் கொண்டுவருவதற்காக எவ்வளவு பெரிய தொகையைச் செலவிடத்துணிந்தேன் என்பதை நீ உணரவேண்டும். எனதன்புள்ள, மதனவல்லி! இவ்வளவுக்கும் நீ எனக்கு முன்பின் வழக்கமானவளல்ல என்பதையும், புதிய ஒருமாது என்பதும் உன் ஞாபகத்தில் இருக்கவேண்டும். இன்னும் உன்னிடத்தில் நான் அதிக நம்பிக்கைவைத்துப் பல காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே நமது சம்பந்தம் ஏற்பட்ட இந்த ஆரம்ப காலத்திலேயே என்தொழிலை ஒரு வர்த்தகமுறையில் யாருக்கும் நஷ்டம் ஏற்படாதபடி செய்துமுடிக்க விரும்புகிறேன். இதோ என்வக்கீல் ஒரு பாண்டைத் தயாரித்துக்கொண்டு வந்திருக்கிருர். அதில் நீ கையெழுத்து போடவேண்டும். இதனுல் நீ எனக்கு மூவாயிரம் பவுன் வரை கடன் சேரவேண்டும்

என்று ஏற்படும். நீ நேரடியாக இவ்வளவு பெரிய தொகை யையும் கொடுக்கவேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீ என்னை ஏமாற்ற ஏதேனும் முயற்சிசெய்வதாக இருந்தால் அப்போது நான் தற்சமயம் உனக்குக் கொடுத்த எல்லா சாமான்களையும் திருப்பிப் பெற்றுக்கொள்ளவேனும் எனக்கு உரிமை இருக்கவேண்டாமா? ஒரு எச்சரிக்கையை யொட்டியே இவ்வித ஏற்பாட்டைச் செய்கிறேனேயொழிய வேறில்லை. நீ சூழ்ச்சியில்லாமலும், என் விருப்பப்படியும் நடந்துகொண்டால் இந்த பாண்டில் கையெழுத்து இடுவ தால் உனக்கு எத்தகைய அபாயமும் ஏற்படாதென்பது திண்ணம். எனது வக்கீலின் இஷ்டப்படி நீ செய்துவிடு. பிறகு பலதிட்டங்களை விளக்கிக்கூறி உன்னை மிக்க்சௌகரிய மாக வைப்பேன்."

மதனவல்லி எத்தகைய மறுப்பும் கூறவில்லை. பத்மா வதியம்மாளுடன் வக்கீல்இருந்த அறைக்குச் சென்று பாண் டில் கையெழுத்திட்டாள். உடனே வக்கீல் விடைபெற் றுக்கொண்டு சென்றார். அந்த வக்கீல் வெளியேறியதும் பத்மாவதியம்மாள் மீண்டும் மதனவல்லியிடம், "எனதன் புள்ள மதனவல்லியே! நான் சில வருஷங்களுக்குமுன் இள வரசரின் அந்தரங்கக்காதலியாக இருந்தேன் என்று கூறு வதைக் கேட்டு பிரமிப்படையவேண்டாம். ஆனால் பிறகு சொற்பகாலத்துக்குள் எங்கள் சம்பந்தம் அறுபட்டுவிட்டது. அதனால் எனக்கு அரசமாளிகையில் இருந்த செல்வாக்கு சிறிது குறைந்துவிட்டதென்றே சொல்லவேண்டும். இதோ நேற்று இரவு இங்குவந்து உன்னைக் கண்டுவிட்டுப்போன மற்றொரு மாதும் என்னைப்போலத்தான் சொற்பகாலம் இள வரசருடன் சம்பந்தம் பெற்றிருந்தாள். ஆனால் எனக்கும் அவளுக்கும் வித்தியாசமுண்டு. என் சம்பந்தமெல்லாம் மிக

இரகசியமாக இருந்தது. அவளுடைய சம்பந்தமோ பகிரங்கமானதாயிருந்தது. என்னைவிட அவளுக்கு இளவாசரிடம் அதிக செல்வாக்கு இருந்ததால் அவர்களிருவரின் சம்பந்தம் அறுபட்டபோது அவள் அதிகம் வருந்தினாள். ஆகவே சென்ற சொற்பவருஷங்களாக அவளுக்கும் இளவாசருக்கு மிடையில் பிரமாதமான சகாரம் நடந்தது. ஆனால் என் விஷயம் அப்படியல்ல. எனக்கு இளவாசர் எழுதிய கடிதத்திலிருந்தே அவர் என்னிடம் துவேஷம் காட்டவில்லையென்பது தெரிகிறது. எனினும் நாங்களிருவருமே எங்களுக்கு அரசமாளிகையில் இருந்த செல்வாக்கை இழந்துவிட்டதற்காக உண்மையில் வருந்துகின்றோம். எங்களுக்கிருந்த செல்வாக்கினால் நாங்களும் எவ்வளவோ சுகப்பட்டதுடன் எங்களுக்கு வேண்டிய பல பந்துமித்திரர்களுக்கும் அந்த செல்வாக்கைக்கொண்டு பல சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்தோம். ஆகவே அப்படிப்பட்ட செல்வாக்கை மறுபடியும் அடைய நாங்கள் பலகாலமாக ஏதேனும் வழி அகப்படுமா என்று சிந்தித்துக்கொண் டிருக்கிறோம். மற்றொருவர் மூலமாகவேனும் பழைய செல்வாக்கை யடைய நாங்கள் ஆவலுடையவர்களாக இருக்கிறோம். அதற்காகத்தான் நான் தந்திரத்திலும், ஏமாற்றுவதிலும் சிறந்தவளான கௌரி என்னும் மாதினிடம், யாரேனும் யௌவனமும் ரூபலாவண்யமும் வாய்ந்தபெண் அகப்பட்டால் என்னிடம் கொண்டுவந்துவிடும்படி சொல்லியிருந்தேன். இளவாசரது மாளிகையில் எத்தனையோ அழகுள்ள மாதர்கள் இளவாசரது தயவைநாடிக் காத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களனைவரையும் விட அழகும், யௌவனமும், இனிய குணங்களும், நல்ல முகவசீகரமும் வாய்ந்தபெண் தேவையாயிருந்தது. கடைசியாக அந்தக் கௌரி எங்கள் காரியத்துக்குப் பலவிதங்களிலும் ஏற்ற உன்னை முந்தாநாள்

சந்தித்து அழைத்துவந்தது பற்றி நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன்" என்றுகூறித் திடீரென்று பேச்சை நிறுத்தி விட்டு மதனவல்லியின் முகத்தை நோக்கினள்.

பத்மாவதியம்மாள் கூறியதையெல்லாம் கேட்ட மதன வல்லி தன் தலைவிதி எவ்வாறு முடியப்போகிறதென்பதை ஒருவாறு யூகித்து அறிந்துவிட்டதால் அவளது முகம் அச்சத்தாலும் நாணத்தாலும் வெளுத்தது. இப்படிப்பட்ட அவதூறுன விஷயங்களெல்லாம் அவளுக்கு முன்பின் தெரியாதாகையால் இடிவிழுந்தவள்போல் திக்பிரமை யடைந்தாள். எனினும் இதனுல் தனக்கு எவ்வளவு சுக சௌகரியங்களும் செல்வமும் கிடைக்கப்போகிறதென்பதை உணர்ந்தபோது அவள் சிறிது ஆறுதலும் திருப்தியும் அடைந்தாள். இவ்வாறு மதனவல்லியின் முகத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிய குறிப்புகளைக்கண்ட பத்மாவதியம்மாள், இத்தகைய வேலைகளில் தேர்ச்சி பெற்றவளாதலால் மதனவல்லியின் உள்ளத்தில் தோன்றியவைகளை அப்படியே அறிந்துகொண்டு இனி மதனவல்லி தன் சொந்த பொருளாகிவிட்டாள் என நிச்சயித்து சந்தோஷமடைந்தாள்.

எனவே பத்மாவதியம்மாள் மற்றும் தைரியத்துடன் மேலும் கூறியதாவது:—"நாளையதினம் நீ உனக்காக ஏற்படுத்தப்பட்ட வீட்டுக்குப் போய்விடலாம். நீ அங்குபோய் ஒன்றிரண்டு வாரங்களுக்குள் மிக ரூபலாவண்யமுள்ளவளும், அதிக மனோ உறுதிவாய்ந்தவளுமான ஒரு கன்னிகை திடீ ரென்று ரத்னபுரியில் வாழ வந்திருக்கிருள் என்னும் செய்தி இந்நகரின் மேற்குப் பாகங்களிலெல்லாம் பரவிவிடும். பலரும் உன்னைக் கண்டுபேச ஆவல்கொள்வார்கள். ஆனுல் நீ யார் என்பதோ எங்கிருந்துவந்தாய் என்பதோ யாருக்கும் தெரியப்போவதில்லை. எல்லாம் மர்மமாகவே இருக்கப்போகிறது. நீ எல்லா சாமான்களுக்கும் அப்போதைக்கப்போது பணம்

கொடுத்து விடுகிறுய். வாடகையும் தவறுவதில்லையென்று தெரிந்தால் நீ ஏதோ ஒருபெரிய பணக்காரி என்றும் இங்காபிர புக்களை லட்சியம் செய்யமாட்டாயென்றும் நினைப்பார்கள். நேற்றிரவு இங்குவந்த ஜயதேவியை உனக்குத் துணையாக வைத்து விடுகிறேன். அவள் தீர்க்கயோசனை யுள்ளவளாயும், வீட்டு நிர்வாகவிஷயங்களை அதிக ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்பவளாயும், உன்னிடம் தாய்போ லன்புடையவளாயும் இருப்பாள். நீ எங்குபோனுலும் உன்னுடன் வண்டியிலோ, கால்நடையாக உலாவும்போது வருவாள். ஆகையால் உன்னைப்பற்றித் தவறுன புகார், ஒன்றும் கிளம்பிவிடாது. இப்படி உன்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்துவிட்டால் பிறகு உன் சாமர்த்தியப்படி அது விருத்தியடையும். எத்தனையோ பிரபுக்களும் மிராசுதார்களும், பிரபல வியாபாரிகளும் உன்பால் மோகங்கொண்டு உன்னுடன் பேசவருவார்கள். நீ யாரையும் லட்சியம் செய்யாதவள்போல் நடந்துகொள்ள வேண்டும். ஒருவரைப் பரிகாசம் செய்து அனுப்பி விட வேண்டும், மற்றொருவரைக் கோபிக்கவேண்டும். வேறொருவரை அவமானப்படுத்த வேண்டும். இவ்வாருக எவருடைய வலையிலும் நீ சிக்கிவிடலாகாது. பலர் தங்கள் மோகத்தின் காரணமாகப் பெருந்தொகையை உன் மீது எழுதிவைப்பதாகச் சொல்வார்கள்; வேறு சிலர் உன்னை விவாகமே செய்துகொண்டு மனைவியாக ஏற்றுக்கொள்வதாகக் கூறுவார்கள். அவர்கள் இவ்வாருக எழுதி அனுப்பும் கடிதங்களையெல்லாம் நீ பொருட்படுத்தாமல் அவற்றை அவரவர்களுக்கே திருப்பி யனுப்பிவிடவேண்டும். அல்லது எப்படிப்பட்ட பதிலையும் கொடுக்காமல் மௌனமாக இருந்து விடவேண்டும். அப்போதுதான் உனக்கு அதிக மதிப்பு ஏற்படும். நீ கற்பிற்சிறந்தவள் என்ற பெயரும் நகரம் முழுதும் பரவும். இவ்வாறு நடந்தால் சில வாரங்களுக்குள் நக

ரில் எங்குபார்த்தாலும் உன்னைப்பற்றியே பேசிக்கொள்வார்கள். இதற்கிடையில் நீ செய்யவேண்டிய வேலை சில இருக்கின்றன. அதாவது நீ சங்கீதமும் சித்திரம் வரைதலும் கற்றுக்கொள்ளவேண்டும். முன்னமே இவ்விரு கலைகளும் உனக்கு உபாயமாகத் தெரியும். ஜயதேதவி அவற்றில் பூரணபாண்டித்யம் பெற்றவள். அவள் உனக்குக் கற்றுக் கொடுத்து நீயும் தக்கபடி தேர்ச்சியடையும்படி செய்வாள். மேலும் நீ தற்காலத்துக்கேற்ற எல்லாவகை இலக்கியங்களும் சம்பந்தப்பட்ட பல நூல்களைப் படிக்கவேண்டும். உனக்கு அவசியமான பல புஸ்தகங்களும் ஒரு பீரோ நிறைய உன் இருப்பிடத்துக்கு அனுப்பப்படும். நீ நவீன நாவல்களையும் படிக்கவேண்டும். அப்போதுதான் உலகில் நடைபெறும் மர்மங்கள், அதியாச்சரியமான சம்பவங்கள் ஆகியவற்றின் நுட்பங்களை அறிந்துகொள்ளமுடியும். இன்னும் பெரிய கோர்ட்டுகளில் நடக்கும் விவகாரங்களின் தன்மைகளையும், பிரபல பிரபுக்கள், வர்த்தகர் முதலானோர் சரித்திரங்களையும் பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பெரிய இடங்களுக்குப் போனால் அவர்களுடன் எந்த விஷயத்தைப்பற்றியும் சம்பாஷிக்கமுடியும். உனக்கோ ஞாபகசக்தி அதிகமிருக்கிறது. ஒருமுறை படித்தால் போதும். உடனே அப்படியே மனதில் பதிந்துவிடும். இதுமாத்திரமல்ல; மற்றொரு வித்தையிலும் நீ தேர்ச்சியடையவேண்டும். சமயத்துக்குத் தக்கபடி ஒருமுறை துக்கமுள்ளவள் போலும், மற்றொருமுறை கோபமுள்ளவள் போலும் வேறொருமுறை அன்புடன் வரவேற்பவள்போலும் முகத்தின் லட்சணத்தை மாற்றிக்கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும். மற்றும் பல மாதிரியெல்லாம் உடையணியவும், சிங்காரித்துக்கொள்ளவும் அறியவேண்டும். இப்போது நான் கூறிய எல்லாவற்றையும் ஜயதேவி கற்றுக் கொடுப்பாளென்

றுலும் நீயும் அதில் ஆசையும் ஊக்கமும் காட்டி கற்றுக் கொண்டால்தான் விரைவில் தேர்ச்சியடையலாம். உனக்கு வேண்டிய சாமர்த்தியமும் அறிவும் இருப்பதால் நீ விரைவில் அபிவிருத்தி யடையலாம்."

இவ்வாறு பத்மாவதியம்மாள் கூறியதும், தன் பேச்சை சற்று நிறுத்தி மீண்டுமொருமுறை மதனவல்லியின் முகத்தைநோக்கினள். ஆனல் இம்முறை மதனவல்லி பூரண திருப்தியடைந்திருக்கிருள் என்பதை உணர்ந்தாள். ஆகவே அவள் மீண்டும் கூற ஆரம்பித்துப் பேசியதாவது:—நீ என்னிடம் அனுமதிபெருமல் யாருடனும் சினேகம் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. யாரையும் விருந்தாளியாகவும் ஏற்கக்கூடாது. ஆனல் என்னுடன் நீ சம்பந்தம் வைத்திருப்பதாக யாருக்கும் தெரியக்கூடாது. நமது நட்பு மிக இரகசியமாகவே இருக்கவேண்டும். நீ அடிக்கடி என் வீட்டுக்கு வரக்கூடாது. எப்போதாவது மிக அவசரமான காரியமிருந்தால் மாலையில் இருட்டானதும் வரலாம். நமக்குள் நடக்கவேண்டிய விஷயங்களையெல்லாம் ஜயதேவியின்மூலம் நடத்திக்கொள்வோம். இப்போது நான் போட்டிருக்கும் திட்டத்தால் என்ன நன்மை ஏற்படும் என்பதைக் கவனிப்போம். உன்னைப்பற்றித்தான் இந்நகரிலுள்ள பிரபுகளெல்லாம் சிந்தித்துக்கொண் டிருப்பார்கள் என்று முன்னமே சொன்னேனல்லவா? நீ நந்தவனம் முதலிய எங்கு சென்றாலும் உன்னைப் பின்தொடர்ந்து பெருங்கூட்டம் கூடிவிடும். நகரிலுள்ள பிரபல மாதர்கள் பலரும் பொருமைப்படுவார்கள். ஏனெனின், அவர்களுடைய கணவன்மாரும், காதலர்களும், நட்பினர்களும் உன்மீது மோகங்கொண்டிருக்கிருர்கள் என்பதை அம்மாதர்கள் அறிந்துகொள்வர். எந்த கிளப்களிலும், விருந்துகளிலும் உனக்கு அழைப்புகள்வரும். பல பத்திரிகைகளிலும் உன்னைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்படும்.

நாளடைவில் இளவரசருக்கும் உன்னைப்பற்றிய செய்திகள் எட்டும். சதா இளவரசர் அரண்மனையிலேயே இருக்கும் எனது சகோதரி புத்திரனை செல்லப்பப்பிரபு உன்னைப் பற்றி இன்னும் மிகைப்படுத்திச் சொல்லி உன்னிடம் அவருக்கு ஆர்வம் அதிகரிக்கும்படி செய்வான். ஆனால் ஒன்று சொல்லி வைக்கிறேன். எக்காரணத்தைக் கொண்டும் செல்லப்பப்பிரபுவையும் நீ உன் வீட்டில் எனக்குத் தெரியாமல் சேர்க்காதே. அதிலும் முக்கியமாக உன்னைக் கௌரி என்னிடம் கொண்டுவந்துவிட்டாள் என்பது அவனுக்குத் தெரியவேகூடாது. எப்படியும் உன்னுடைய நிலைமைக்கு நான் காரணமென்பதும், என்னால்தான் நீ இங்கிருக்கிறாய் என்பதும் யாருக்கும் தெரியலாகாது. உண்மை தெரிந்துவிட்டால் இளவரசர் விஷயங்களைக் கிரகித்துக்கொள்வார். பின்னர் நம்முடைய ஏற்பாடு ஒன்றும் நடைபெறாமல் தடைபட்டுப் போய்விடும். இப்போது என்னுடைய யோசனைகளும் ஏற்பாடுகளும் விவரமாக உனக்குத் தெரிந்துவிடவில்லையா? சுருங்கக் கூறவேண்டுமாயின் என் ஏற்பாட்டின்படி நீ இளவரசரின் காதலியாக வேண்டுமென்பதுதான் என் நோக்கம்.''

இக்கடைசி வாக்கியத்தைக் கேட்டதும் மதனவல்லியின் முகம் சற்று வெளுத்தது பாவம்! ஐயோ, இத்தகைய வாழ்வையா அடையவேண்டும் என்று சிந்தித்தாள். ஆனால் பெரிய அந்தஸ்தை யடைவதையும், நிரம்பிய செல்வம் பெறப் போவதையும் நினைத்து மறுநிமிஷமே ஆனந்தங்கொண்டாள்; ஆனால் அவளுடைய மனச்சாட்சி மட்டும் ஒவ்வொரு நிமிஷமும் அவளை எச்சரிக்கை செய்துகொண்டே இருந்தது. ஆயினும் பத்மாவதியம்மாள் கொடுத்த நம்பிக்கையினால் மதனவல்லி சந்தோஷமடையும்போது அந்த எச்சரிக்கைகள் அலட்சியம் செய்யப்பட்டன.

இதையும் உணர்ந்துகொண்ட பத்மாவதியம்மாள் மீண்டும் பேச ஆரம்பித்துக் கூறியதாவது:—"ஆம்; நீ இளவாசனுடைய காதலியாகத்தான் இருக்கப்போகிறாய். கற்புக்குப் பங்கமல்லவா என்றாவது, பெருமையான வாழ்க்கையாகாதே என்றாவது நீ வருத்தப்படவேண்டாம். பிறரால் பொறாமைப்படத்தக்க அவ்வளவு உயர்ந்த அந்தஸ்தாகும். என் பொறாமைப்படத்தக்க என்று சொன்னேனென்றால் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த மாதர்களெல்லாம் உண்மையிலேயே உன் பதவியைக் கண்டு பொறாமைப்படுவார்கள். ஆனால் உன்னை வெறுக்கிறவர்களும் உன் தயவைநாடி உன்னை ஸ்துதி செய்துகொண்டுதா னிருப்பார்கள். ஆடவர்களுக்கோ நீதான் தேவியாகத் தோன்றுவாய். இப்போது நான் சொன்ன முறைகளில் நீ சாமர்த்தியமாக நடந்துகொண்டால் நீ விரைவில் வெற்றியடைவாய். உன்னைப்பற்றிய ஆவல் இளவாசருக்கு அதிகரித்துவிடுமானால் அவர் எப்படியாவது உன்னிடம் அறிமுகம் செய்துகொள்ள விரும்புவார். ஒருகால் அவரே நேரில்வந்தாலும் வரலாம். அவர் அப்படி உன் மாளிகைக்கு வந்தாலும் நல்லதுதான். பிறகு அவர் உன் கையில் அகப்பட்டுக்கொண்ட மாதிரிதான். அப்போது நீ உன் நிபந்தனைகளைக் கூறலாம். அவர் உன்னிடம் தணியாக்காதல் கொண்டுவிட்டாரென்று தெரிந்தால் நீ எதையும் அவரைக்கேட்டுப் பெறமுடியும். வருஷாவருஷம் நூற்றுக் கணக்கான பவுன் வருமான ஒரு பட்டத்தைக் கேட்டாலும் அவர் அளித்துவிடுவார். நாம் அதைப்பற்றி அதிகம் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அப்போதைக் கப்போது சொல்லியனுப்பும் யோசனையின்படி நீ துரோகமில்லாமல் நடந்துவந்தால் வெற்றி நம்முடையதே. கட்டாயம் நாம் வெற்றி பெறுவோமென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் சிறிது தவறிநடந்தாலும் உனக்குக் கஷ்டம் வருமென்பது

திண்ணம். நீ நல்ல செல்வாக்குப்பெற்று இளவரசர் உன்னைத் தேடி வரும்வரையில் பொறுமையுடன், "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு" என்பது போல கொக்காகிய நீ சரியான மீனாகிய இளவரசர் வரும் வரையில் மற்றவர்கள் எவருடைய வசமும் மயங்கி அகப்பட்டுக்கொண்டு விடக்கூடாது. அதாவது விபசாரி என்னும் பழி வந்துவிடுமாயின் பிறகு உன்னை யாரும் மதிக்க மாட்டார்கள். நாம் போட்ட பெரிய திட்டமெல்லாம் பாழாய்ப்போகும். நீ சற்று பொறுமையுடன் இருந்து வெற்றி பெற்றுவிட்டால் பின்னால் எவ்வளவு சௌகரியத்தையும் செல்வாக்கையும் அநுபவிக்கலாம் என்பதை யோசித்துப் பார். நீ நல்ல நிலைமையை அடைந்துவிட்ட பின்னர் உனக்கு இவ்வளவு உதவிசெய்த எங்களுக்கெல்லாம் வேண்டிய உதவியைச்செய்ய நீ தவறலாகாது. உன்னைமட்டுமல்ல; உன் சகோதரியையும், அத்தையையும்கூட அபாரமான தரித்திரத்தினின்றும் காப்பாற்றியவர்கள் நாங்களே என்பதையும், உன்னை இப்போது இவ்வளவு சௌகரியமான அதிகாரமுள்ள பதவிக்கு அனுப்புகிறவர்களும் நாங்களே என்பதையும் நீ உணரவேண்டும். ஆகவே நாம் எதிர்பார்க்கும் பதவி உனக்குக் கிடைத்ததும் நீ உன் செல்வாக்கை உபயோகித்து நாங்கள் குறிப்பிடும் ஆசாமிகளுக்கெல்லாம் பென்ஷனும், பதவிகளும் வாங்கித்தர ஏற்பாடு செய்யவேண்டும். மதனவல்லி! இப்போது நாம் உனக்கு அளிக்கும் வேலைக்கு நீ எவ்விதத்திலும் மிகமிகப் பொருத்தமானவளே என்பது எனக்குத் தெரியும். ஆனால் நீ செய்யவேண்டியதெல்லாம் பூரா உற்சாகத்துடன் மனமார இத்துறையில் உழைக்கவேண்டியதே."

இதையெல்லாம் கேட்ட மதனவல்லி சொற்பநேர சிந்தனைக்குப்பின் பத்மாவதியம்மாள் கூறியபடியே எல்லாவகை

பிலும் நடந்துகொள்வதாக உறுதிகூறினள். அவளுடைய எதிர்கால வாழ்க்கை அவ்வாறு இருக்கவேண்டுமென சர்வ சக்தியால் ஏற்படுத்தப்பட் டிருக்கும்போது யார் என்ன செய்யமுடியும். பாவம்! தன் சகோதரி கோமளவல்லியைப் போலவே கள்ளங் கபடமற்று வளர்ந்த கற்பகவல்லி பாழும் நாகரிகம் நிறைந்தது என்று சொல்லப்படும் நகருக்குச் சென்றதில் அங்குள்ள அயோக்கிய மாதர்களால் விபசாரியாக்கப் பட்டாள். அவள் தான் என்செய்வாள் பாவம்! பசிக்குமுன் பத்தும் பறக்கும் என்பதற்கேற்ப கையில் காலணுவும் இல்லாமல் நிர்க்கதியாய் ரஸ்தாவில் நிற்க நேர்ந்ததில் எதுவோ ஒரு அயோக்கிய மாதான கௌரியின் கையில் அகப்பட்டுக் கொண்டாள். இப்படித்தான் நமது தேசத்திலும் இக்காலங்களில் நகரங்களில் நடைபெறுகின்றன. வெளியூர்களிலிருந்து கள்ளங் கபடமற்ற பெண்களை அழைத்துவந்து சில கல்நெஞ்சு வாய்ந்த மாதர்கள் அவர்களை விபசாரத்திலீடுபடுத்தி நாட்டைப் பாழாக்குகிறார்கள். அதனுல் ஏற்படும் தீமைகளையும் நஷ்டங்களையும் உணர்ந்த ஆடவர்களும் மாதர்களுமான பெரியார்கள் விபசாரத் தடைச்சட்டமாக்க வேண்டுமென்று முயல்கின்றனர். அவர்களுடைய முயற்சி பாராட்டத்தக்கதே.

167 - வது அத்தியாயம்

இவ்வாருக மதனவல்லி பத்மாவதியம்மாள் கூறிய யோசனையின்படியே தனக்கென ஏற்படுத்தப்பட்ட மாளிகையில் தன் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தாள். ஜயதேவி மதனவல்லியின் துணைவியாக அமர்ந்தாள். உண்மையில் ஜயதேவி மற்றொரு வேலையையும் செய்தாள். அதாவது

பத்மாவதியம்மாளின் தூதாகயிருந்து மதனவல்லியின் மாளிகையில் அப்போதைக்கப்போது நடைபெறும் விஷயங்களையெல்லாம் பத்மாவதி யம்மாளிடம்போய்ச் சொல்லிவந்தாள். ஆனால் நமது கதாநாயகியான மதனவல்லி எள்ளளவும் வார்த்தை தவறுமல், தான் எவ்வாறு நடந்துகொள்வதாக வாக்களித்தாளோ அவ்வாறே உண்மையுடன் நடந்துவந்தாள். தான் ஏற்றுக்கொண்ட வேலையைச் சரிவரச்செய்ய வேண்டுமென்பது அவளது எண்ணமாக இருந்ததுடன் உண்மையிலேயே தானும் அந்த உயரிய பதவியை ஆவலுடன் எதிர்பார்த்தாள். அவளுக்கு ஜயதேவிமட்டு மல்லாமல் ஒரு வேலைக்காரியும் அமர்த்தப்பட்டாள். அந்த வேலைக்காரி கடைசிவரை மதனவல்லியுடன் இருந்து அவளது அந்தரங்க தோழியாகவும் இருந்தாள். அவ்வாறே மிகவும் கண்டிப்பான, தன் வேலையில் கவனமும் அக்கரையுமுடைய சேவகனும் நியமிக்கப்பட்டான். அவனிடம்போய் எப்படிப்பட்ட பிரபும் அவனது எஜமானியைப்பற்றி ஒன்றும் பேச முடியாது. அவன் மிகக் கண்டிப்பாக நடந்துகொள்வான். தன் எஜமானியைப்பற்றி எத்தகைய அபகீர்த்தியும் வாராதபடி பார்த்துக்கொண்டான். அந்த வேலைக்காரன் வயோதிகனுகவும், அழகில்லாதவனுயும் இருந்ததும் நல்லதாகவே இருந்தது. ஏனெனின் அந்நகர நாகரிகத்தில் பல உயர்ந்த குடும்பத்திலுள்ள மாதர்கள், தங்களிடம் வேலைக்கு அமரும் யௌவனமும் அழகும்வாய்ந்த சேவகர்களுடனும் சம்பந்தம் வைத்துக்கொள்வது சர்வ சகஜமாயிருந்தது. பத்மாவதியம்மாள் எல்லாவற்றையும் ஜாக்கிரதையாகத் தான் பார்த்து அமர்த்தினுள்.

மதனவல்லி நாளுக்குநாள் தன் இயற்கை சுபாவத்தையும், தான் சிறுபிராயத்தில் தன் அத்தையிடமிருந்து கற்ற

குணாதிசயங்களையும், நற்குண நல்லொழுக்கங்களையும் அறவே மறந்து பத்மாவதியம்மாளும் ஜயதேவியும் கூறும் யோசனைப் படியெல்லாம் சாமர்த்தியமாகவும் உள்ளன்புடனும் நடந்து வந்தாள். இதனால் அவள் விரைவில் சங்கீதம், சித்திரம்வரைதல், இதர இலக்கியங்கள் முதலிய எல்லாக் கலைகளிலும் தேர்ச்சிபெற்றாள். நாம் முன்னமே மதனவல்லி சகலவிதமான ஆற்றலும், புத்தி சாதுர்யமும் வாய்ந்தவளென்றும், உறுதியுடன் வேலை செய்யக்கூடியவளென்றும் கூறியிருப்பதால் அவள் இவ்வளவு விரைவில் தயாராய்ப்போனதில் ஆச்சரியமொன்றுமில்லை. எனவே அவள் இரண்டுமாதங்களுக்குள் கந்தபுரியைச்சேர்ந்த கற்பகவல்லி என்பதே இல்லாமல் முற்றும் நடை, உடை, பாவனைகளில்மாறி இரத்தினபுரியின் அழகிய மாதர்களிடையே திலகமாய்த் திகழும் மதனவல்லியானாள்.

மதனவல்லி சமயாசமயங்களில் மாலைநேரத்தில் பத்மாவதியம்மாள் வீட்டுக்குச் செல்வதுண்டு. ஒருநாள் அவள் அங்கேபோ யிருக்கும்போது செல்லப்பப் பிரபுவைக் கண்டாள். இங்கே செல்லப்பப் பிரபுவின் சரித்திரத்தைச் சற்று விளக்குவோம். இந்த யௌவன பிராயமுள்ள பிரபு பத்மாவதியம்மாளுக்குத் திருட்டுச் சம்பந்தத்தால் பிறந்த புதல்வனாவான். ஆனால் இளவரசனுக்குப் பிறந்தவனல்ல. இளவரசனுக்கும் பத்மாவதியம்மாளுக்கும் சம்பந்தம் ஏற்படுவதற்கு வெகுகாலத்துக்கு முன்னமே அவள் வேறு யாருடனோ சம்பந்தம்கொண்டு அவனைப் பெற்றுவிட்டாள். இந்த இரகசியம் இளவரசனுக்குத் தெரியும். அவன் இளவரசனுக்கே பிறந்தவனாக இருந்தால் கேவலம் தனது குமாரன் மனைவியை அவன் காதலித்திருக்கமாட்டானல்லவா? பத்மாவதியம்மாளும் செல்லப்பனிடம் அவனுடைய

பிறப்பைப்பற்றிய இரகசியமொன்றையும் கூறுமல் அவன் குழந்தையா யிருக்கும்போது தந்தையையும் தாயையும் இழந்து திக்கற்றவனுப் போனதால் தான் எடுத்து வளர்த்து வந்ததாயும் ஒரு பொய்க்கதை கட்டிக் கூறிவிட்டாள். செல்லப்பனும் தனது பிறப்பைப்பற்றித் தெரிந்துகொள்வதில் அதிக சிரத்தை காண்பிக்கவில்லை. தான் ஏதோ சௌகரியமாக இருப்பதில் அவனுக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டது. இளவரசனும், சாதாரணமாக மன்னர்கள் யாராவது சிலரை காலப்போக்கு நண்பர்களாக வைத்துக்கொள்வதுபோல செல்லப்பனை நண்பனுக்கிக்கொண்டான். உண்மையில் செல்லப்பனிடமும் சில நல்லகுணங்கள் இருந்தன. மேலும் இளவரசனின் தயவு இருக்கிறதென்பதற்காக அதை அநாவசியமானதும் அக்கிரமமானதுமான வழியில் செலவழித்துக் கொள்ளாமையால் அந்த தயவை இழக்காமலேயே இருந்தான். மேலும் நாம் அவனது பிற்பட்ட சரித்திரத்தில் கண்டதுபோல அவன் சமய சந்தர்ப்பங்களில் அடிபட்டுப் பலவகையான தீய வாழ்க்கைகளில் இறங்கினுனே யொழிய அவன் தனி ஹோதாவில் நல்லவன்தான். இப்படித்தான் இன்றளவும் பெரும்பாலோர் சிறந்த கொள்கைகளையும், உயரிய தத்துவங்களையும் தங்கள் வாழ்க்கையின் லட்சியமாகக் கொள்ளாமல் எப்படி எப்படியெல்லாம் சமய சந்தர்ப்பங்களுர், உலகப்போக்கும் தள்ளிக்கொண்டு போகிறதோ அவ்வழியிலெல்லாம் சென்று உழன்றுவிட்டு அவாவரும் இன்ன மதத்தையோ, ஜாதியையோ சேர்ந்தவர்களென்று பெருமை பாராட்டிக் கொள்கின்றனர். ஏதோ சில மகான்கள்தான் உயர்ந்த லட்சியங்களைக்கொண்டு தங்கள் வாழ்க்கையை உறுதியுடன் நடத்துகின்றனர். அவர்களைத்தான் அறிஞர் உலகமும் பாராட்டுகின்றது. ஒவ்வொருவரும் அவ்வாறு பரிசுத்த வாழ்க்கையை நடத்த முயலவேண்டும்.

தன் வளர்ப்புத் தாயின் வீட்டில் செல்லப்பன் மதன வல்லியைக் கண்ட தினம் முதல் அவளிடம் அவனது மோகம் பாயத் தொடங்கிற்று. எனினும் அதை அவன் தன்னு வியன்றவரையில் மறைத்து வைத்தான். ஏனெனின் பத்மா வதியம்மாள் அவனிடம், இளவரசனுக்கு மதனவல்லி மோகம் ஏற்படும்படி செய்யவேண்டியது அவனுடைய கடமை எனத் திட்டமாகத் தெரிவித்துவிட்டிருந்தாள். செல்லப்பன் தன் வளர்ப்புத் தாயின் பேச்சை எதிர்த்து எப்போதும் நடந்ததில்லை. ஆயினும் மதனவல்லியிடம் தனக்குண்டான அளவிலா மோகத்தை மட்டும் தடுத்துக்கொள்ள அவனுல் முடியவில்லை. அவளை அவன் அதிகம் பார்க்கப் பார்க்க அவனுக்கு மோகமும் ஆர்வமும் அதிகரித்துவந்தது. ஆயி னும் அவன் அதை வெளிக் காட்டிக்கொள்ளாமலும், எந்த நண்பரிடமும் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமலும் பத்மாவதி யம்மாள் தனக்கிட்ட கட்டளையை நிறைவேற்ற முயன்று வந்தான்.

பத்மாவதியம்மாளும், அவளது நட்பினரும் எதிர் பார்த்தபடியே எல்லாக் காரியங்களும் நிகழ்ந்துவந்தன. மதனவல்லி இரத்தினபுரியின் மேற்குப்பாகம் முழுவதிலும் ஒரு பெரிய உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டாள். எல்லா விட புருஷர்களும், பணம் கொழுத்துப்போய்ச் செலவு செய்யத் தெரியாமல் அவஸ்தைப்பட்ட மைனர்களும் இதா பிரபல செல்வவான்களும் மதனவல்லியைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தார்கள். அவளுடன் அறிமுகம் செய்துகொள்ள முடியுமாவெனப் பலவகைகளிலும் யோசித்தார்கள். யார் என்ன விசாரித்தாலும் அவள் யார் அல்லது எங்கிருந்து வந்தாள் என்பது தெரியவில்லை. ஆனுல் அவள் அந்நகருக்கு வந்ததும் அம்மாளிகையை அமர்த்திக்கொண்டாள், வாடகை

யும், மற்ற சாமான்களின் கிரயத்தையும் சரிவரக் கொடுத்து வருகிறுள், பல வேலைக்காரர்களுடன் டாம்பீகமாகப் பிறரை லட்சியம் செய்யாமல் வாழ்ந்துவருகிறுள் என்று மட்டுமே தெரிந்தது. மதனவல்லி யார் யாரிடத்தில் பலவித சாமான் களை வாங்கினளோ அவ் வியாபாரிகளுக்கெல்லாம் இம்மதன வல்லிக்குப் பத்மாவதியம்மாளே பண உதவிசெய்தாள் என் னும் சங்கதி தெரிந்திருந்தும் அவர்கள் அதை வெளியிட வில்லை. ஏனெனின், அவர்களுக்கு முன்னரே பத்மாவதி யம்மாள், எதையும் வெளியிடக்கூடாதென்றும், அப்படி வெளியிட்டால் இனி மதனவல்லிக்கு வேண்டிய எந்தச் சாமானும் அவர்களிடம் வாங்கமுடியாதென்றும் கூறி எச்சரிக்கை செய்திருந்தாள். ஆகவே மதனவல்லியைப் பற்றிய முன்பின் விவரம் ஒன்றுமே எவருக்குமே தெரிய வில்லை. அவள் பல ஆடவர்களின் துணையை நாடிய விபசாரி என்று கூறிவிடவும் எவரும் துணியவில்லை. ஏனெனின், அவளுடைய நடத்தையோ குணமோ அத்தகைய சந்தேகத்துக்குச் சிறிதும் இடந்தாவில்லை. ஜய தேவியில்லாமல் அவள் எங்கும் வெளியில் செல்வதில்லை. எவ்வளவோபேர் அவளை நேரில்காண முயன்றுர்கள். ஆனல் முடியவில்லை. அவளுக்குப் பல கடிதங்கள் கிடைத்தன. ஆனல் அவற்றில் சிலவற்றை அவள் அப்படியே திருப்பி அனுப்பிவிட்டாள். வேறு சிலவற்றிற்குப் பதிலே அளிக்க வில்லை. அவளிடம் மோகங்கொண்ட பலர் அவளை விவாகம் செய்துகொள்வதாகக் கடிதம் எழுதினர். அக்கடிதங்களைத் தான் அவள் அப்படியே திருப்பி யனுப்பிவிட்டாள். வேறு பலர் பெருந்தொகையைக் கொடுப்பதாகவும், ஆஸ்தியை எழுதிவைப்பதாகவும் கள்ளக்காதலியாக இருக்கும்படியும் வேண்டினர்கள். அக்கடிதங்களைத் தான் அவள் லட்சியம் செய்யவில்லை. அவைகளுக்குப் பதில் அளிக்கவுமில்லை. இதற்

கிடையில் செல்லப்பனும் அவர்களுக்கு வேண்டிய உதவி செய்துவந்தான். மதனவல்லியின் அழகைப்பற்றியும், பெருமையைப்பற்றியும் அவன் இளவரசனிடம் பிரஸ்தாபித்துப் புகழ்ச்சியாகப் பேசிவந்தான்.

இவ்வாறு மதனவல்லியின் வாழ்க்கை இரண்டுமாதம் வரை கழிந்தபின்னர் ஒருநாள் சுகசிங்கம்பிரபுவின் வீட்டில் விருந்து நடந்தபோது இளவரசரும், அவருக்கு அதிகம் வேண்டியவர்களும், பிரபல பிரபுக்களுமாகிய மற்ற நால்வரும் வந்து சேர்ந்தார்கள். அப்போது மதனவல்லியைப் பற்றிய பிரஸ்தாபம் வந்தது. செல்லப்பன் ஒன்றும் பேசாமல் சொற்பநேரம் மற்றவர்கள் என்னசொல்கிறார்கள் என்பதைக் கவனித்துவந்தான். பிறகு அவன் மதனவல்லியைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும் ஒவ்வொருவரும் ஆவலுடன் அவனது முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கும்படி அவ்வளவு ருசிகரமாக விவரித்தான். கடைசியில் இளவரசர் ஒருவரால் மட்டுமே அவளைக் கைப்பற்றமுடியும் என்றும் கூறிவிட்டான். முன்பு இதே விருந்தைப்பற்றி விவரமாகக் கூறியிருக்கிறோமல்லவா? அதைக் கவனித்தால் செல்லப்பன் எவ்வளவு சாமர்த்தியமாகத் தன்வேலையை முடித்தான் என்பது நன்கு விளங்கும். அவன் எல்லாம் பேசிமுடித்த பிறகு இளவரசனின் முகத்தைக் கவனித்தான். இளவரசன் மதனவல்லியிடம் எவ்வளவு ஆர்வம் கொண்டுவிட்டான் என்பது முகக்குறியால் நன்கு தெரிந்துவிட்டது. பிறகு அந்த ஆறுபிரபுக்களும் எவ்வாறு முறை ஏற்படுத்திக்கொண்டு போட்டிபோட்டார்கள் என்பது நேயர்களுக்குத் தெரிந்தவிஷயம்.

அந்த ஆறு பிரபுக்களும் முறை ஏற்படுத்திக்கொண்டிருப்பதையும், அதில் வெற்றிபெறுபவர்களுக்கென ஆறுயிரம் பவுன்கள் பந்தயம் கட்டப்பட்டிருப்பதையும் மறுநாள் மதன

வல்லிக்கு செய்தி யனுப்பப்பட்டது. அவளும் பத்மாவதியும் மாளிடம் தெரிவித்து எவ்வாறு நடந்துகொள்வதென்று தெரிந்துகொண்டிருந்தாள். அப்படியே முறைப்படி முதல் நாளாகிய திங்கட்கிழமையன்று குமாரவேல் பிரபு வந்தார். அவர் மதனவல்லியின் மாளிகையைச்சேர்ந்த நந்தவனத்தில் வந்ததும் அவரை மயக்குவதற்காக அவள் தன் கிளியைப் பறக்கவிட்டாள். அது நந்தவனம் சென்றதும் அதை நற் சமயமாகக்கொண்டு அக்கிளியைப் பிடித்தான். உடனே அவளும் அவனுக்கு வந்தனம் செலுத்தினள். ஆகவே அவள் தன்னிடம் ஏதோ வணங்கிவிட்டதாக நினைத்துச் சந் தோஷத்துடன் தோட்டத்தைச் சுற்றிக்கொண்டு மாளிகை யின் முன்வாயில் வழியாக உள்ளே நுழைந்தான். மதன வல்லிக்கும் குமாரவேல்பிரபுக்கும் இடையில் பலவிதமான வாக்கு வாதங்கள் நடந்தபின்னர், குமாரவேல் வெட்கப் பட்டு வெளியே வந்துவிட்டான். அவள் அவனை அவ மானப்படுத்தி யனுப்பிவிட்டாள். பிறகு அவள் தான் வெற்றி யடைந்துவிட்டதாக மகிழ்ச்சி யடைந்தாள்.

இரண்டாவது தினமாகிய செவ்வாயன்று சர்தார் சூரிய நாயகம் பிரபுவின் முறையாகும். அப்பிரபு நல்ல சுபாவ முடையவனென்றும், தாராள நோக்கமுடையனென்றும் ஆனல் சிறிது விபசாரத்தில் ஈடுபட்டவனென்றும் செல்லப் பன் மூலம் மதனவல்லி தெரிந்துகொண்டிருந்தாள். சர்தார் சூரியநாயகம் மதனவல்லியைச் சந்திக்க ஒரு விசித்திரமான ஏற்பாடு செய்தான். அதாவது அவள் குடியிருக்கும் மாளி கைக்குச் சம்பந்தமான தோட்டத்தையும், அம்மாளிகையை யும், இன்னும் சில வீடுகளையும் அவன் விலைக்கு வாங்கிவிட்ட தாகவும், அவள் வசிக்கும் வீட்டைப்பற்றிய மாறுதல்களை

அவளோடு கலந்துபேச விரும்புவதாகவும், அன்று மாலை மூன்று மணிக்குமேல் நான்கு மணிக்குள் அவளைச் சந்தித்துப்பேச அனுமதி யளிக்கும்படியும் ஒரு கடிதம் எழுதி யனுப்பினான். அக்கடிதப்படியே சர்தார் சூரியநாயகமும் பகல் மூன்றுமணிக்கு அம்மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அவன் அவளுடன் சொற்பநேரம் வேறு விஷங்களைப்பற்றிப் பேசியபின்னர் அவளைத் தான் விவாகம் செய்துகொள்ள விரும்புவதாக அறிவித்தான். அவளுக்கு அவனிடம் சொற்ப ஆசை ஏற்பட்டது. அனுதாபமும் உண்டாயிற்று. ஆயினும் அவற்றை அடக்கிக்கொண்டு ஒரு புதிய மாதினிடம் அவ்வாறு கூறுவது சரியல்லவெனச் சொல்லி அவனைக் கண்டித்து அனுப்பிவிட்டாள். மறுபடியும் அவன் வந்தால் தன் வேலைக்காரர்கள் அவனை உள்ளே அனுமதிக்கமாட்டார்களென்றும் தெரிவித்துவிட்டாள்.

மூன்றும் தினமாகிய புதன்கிழமை தினம் கர்னல்மாரப்பனுடைய முறை. அவன் மிக அயோக்கியனான வாலிபன் என்றும், நல்ல கொள்கைகள் சிறிதும் இல்லாதவனென்றும் மதனவல்லி செல்லப்பன் மூலம் தெரிந்துகொண்டிருந்தாள். ஆகவே அவனுக்குச் சரியானபடி சூடு கொடுக்கவேண்டுமென்று நினைத்தாள். மதனவல்லியின் துணைவியாகிய ஜயதேவிக்கு அந்நகரில் மற்றொரு புறத்தில் வசித்துவந்த வாரநாயகிச் சீமாட்டி மிகவும் வேண்டியவள். அச்சீமாட்டி அன்று ஒரு தோட்டவிருந்து நடத்தி நகரிலுள்ள பல பிரபுக்களையும், சீமாட்டிகளையும் அழைத்திருந்தாள். அந்த இடத்தில் கர்னல் மாரப்பனைத் தனியாகச் சந்திப்பதாக அவனுக்கு மதனவல்லி தெரிவித்துவிட்டாள்.

186561
சென்னை-600 008

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம், 5-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 6-ம் பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு „ 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	„	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	„	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	„	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	„	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	„	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப் பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	0
5-பாகமும் ...	10	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	12
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம்2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	10
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.